GOKULAM

ஜனவரி 2009 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



தேர்வுக்கு சில டிப்ஸ்!

நீலத் தங்கம் சேமிப்போம்!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


801


802


803


804


805


806


807


808


809


810


811



812


813



814


815


816


817


818


819


820


821


822


823


824


825

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

கல்கி

தரம் நிரந்தரம்

ஜனவரி 2009 மலர் : 26 இதழ் : 12

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்



சாதனை மலரட்டும்!

புத்தாண்டு மலர்ந்திருக்கிறது. இந்த வேளையில், நாம் நினைவுகூர வேண்டிய சில விஷயங்கள் உண்டு.

'இந்த ஆண்டு கல்வியில் தொண்ணூறு சதவீதம் மதிப்பெண் பெறுவேன்; விளையாட்டில் விருது பெறுவேன்; புதிதாக ஒரு திறமையை வளர்த்துக் கொள்வேன்'... இப்படிச் சில தீர்மானங்களை ஏற்படுத்திக் கொண்டால், அது நம்மை வேகமாக முன்னேற்றப் பாதையில் செலுத்தும். 'என்னுடைய தவறுகளை திருத்திக் கொள்வேன். மற்றவர்களோடு அன்புடனும், பொறுமையுடனும் பழகுவேன்'- இப்படிப்பட்ட தீர்மானங்களை அமைத்துக்கொண்டால், மற்றவர்களின் அன்பு, அரவணைப்பு, ஆலோசனை ஆகியவை துணை வந்து நம்மை முன்னேற்றும்.

படிப்பில் சிறந்து விளங்குவதைப் போலவே, அமைதி, அடக்கம், பணிவு, இனிய பேச்சு, பொறுமை, தெரிந்து கொள்ளும் ஆர்வம் போன்ற மிகச் சிறந்த குணங்களை நாம் இயல்பாக்கிக் கொண்டால், நம் வெற்றி சாதாரண வெற்றியாக இருக்காது; சாதனைகளாக மலரும்! அப்படியொரு சாதனை ஆண்டாக, இந்த ஆண்டு உங்கள் அனைவருக்கும் அமையட்டும்!

அனைவருக்கும்
புத்தாண்டு நல்
வாழ்த்துக்கள்.

அன்புடன்
கோகு



கடி 'O' கடி



பேப்பர் போடுறவரை பேப்பர்க்காரர்னு சொல்லறோம்; தபால் போடுறவரைத் தபால்காரர்னு சொல்லறோம்; அப்படின்னா பிச்சை போடுறவர் பிச்சைக்காரனா? பிச்சை வாங்குறவன் பிச்சைக்காரனா?

-Y. ரவிராகுல், ஈரோடு



என்னதான் வாழை தார் போட்டாலும் அதை வெச்சு ரோடு போட முடியாது.

-சி.கண்ணன்,
திருவண்ணாமலை

காய்க்காத கொடி!



''ஊருல எத்தனை கட்சிக் கொடி பறந்தாலும், ஒரு கொடியில் கூட காய் வளராது.''

- சி.கண்ணன்,
திருவண்ணாமலை




"பஸ் டிரைவருக்கு லைசன்ஸ் வேணும்! கார் டிரைவருக்கு லைசன்ஸ் வேணும்! ஆனா, ஸ்க்ருடிரைவருக்கு லைசன்ஸ் தேவையில்லை!"

- ப.கோபி பச்சமுத்து,
கிருஷ்ணகிரி -1

ஜப்பான் நாடாளுமன்றத்தில் இருப்பவங்க எல்லாரும் ஒல்லியாத்தான் இருப்பாங்க, ஏன்னா அவங்கதான் 'டயட்'ல (ஜப்பான் நாடாளுமன்றத்தின் பெயர்) இருக்காங்களே!

- அன்புமணி,
(உறுப்பினர் எண்:120)
ஈரோடு



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888
(30 lines)

தொலைநகல் :
044 - 4343 8899

மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம்:
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



நீலத் தங்கம் சேமிப்போம்!

"உலகின் தண்ணீர்த் தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அதற்கு மாறாக, நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே இருக்கிறது. தண்ணீர்த் தேவைக்காக அடுத்த உலகப் போர் நிகழ்ந்தாலும் ஆச்சர்யமில்லை" என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஒரே மாநிலத்தின் வெவ்வேறு ஊர்களுக்கு, ஒரே நாட்டின் வெவ்வேறு மாநிலங்களுக்கு தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதில் சண்டை சச்சரவுகளைப் பார்க்கிறோம்.

மழைக்காலத்தில் வரும் தண்ணீரை தடுப்பணைகளைக் கட்டி தேக்கி வைக்

- முனைவர் ஆசுரா

காமல், கடலுக்கு அர்ப்பணிக்கிறோம். வெயில் காலத்தில் 'தண்ணீர் தண்ணீர்' என்று தவிக்கிறோம்.

அரசியல், நிர்வாகம் என்று காரணங்கள் பலவாக இருக்கலாம். ஆனால், குடிநீர் இல்லாவிட்டால் எதிர்காலம் விபரீதம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

மிகமிக அடிப்படையான இந்த விஷயத்தில், வளரும் சந்ததிகளான எதிர்கால சமுதாய விளக்குகளின் பார்வை எப்படி இருக்கிறது? நீரை சேமிப்பது, மறுசுழற்சி முறையில் பயன்படுத்துவது, சிக்கனமாகச் செலவு செய்வது... பற்றி பத்தாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள், தங்கள் கருத்துகளைச் சொன்னார்கள்.

அதுதான், 'நீலத்தங்கத்தை பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்ற தலைப்பில் நடைபெற்ற போட்டி!

'ஹென்கல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு விருது 2008'க்காக நடந்த இந்தப் போட்டியில், அகில இந்திய அளவில் 500க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து 2500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். பல கட்டங்களாக நடந்த இந்தப் போட்டியின் இறுதிச் சுற்று, சென்னையில் 'வீடியோ கான்ஃப்ரன்ஸிங்' முறையில் நடைபெற்றது.



இந்த இறுதிச் சுற்றுக்கு ஆறு மாணவர்கள் தேர்வு பெற்றனர். அதில் மூன்று பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். சென்னையைச் சேர்ந்த கஸ்தூரி, பொள்ளாச்சியைச் சேர்ந்த மானஸா பரமசிவம் மற்றும் ராமநாதபுரத்தைச் சேர்ந்த அப்பாஸ் அலி.

டெல்லியில் இருந்து சித்தார்த் பானர்ஜி, கொல்கத்தாவில் இருந்து புஷ்ரா ஆலம், ஹைதராபாத்தில் இருந்து ரஞ்சித் குமார் ரெட்டி ஆகியோர் மற்ற மூவர்.

தேர்வு பெற்ற இந்த ஆறு மாணவர்களும் நீலத்தங்கத்தை பாதுகாப்பது தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை வாசித்



அப்பாஸ் அலி, இராமநாதபுரம்

தண்ணீர்ப் பானையில் சுத்தமாக்கும் கொட்டைகளைப் (தேத்தான் கொட்டை) போடுவதன் மூலம் கலங்கிய நீர் பன்னிரண்டு நிமிடங்களில் தெளியும். ஆனால், இதே கொட்டைகளைப் பசையாக்கிப் பயன்படுத்தும் போது, கலங்கிய நீர் ஐந்து நிமிடங்களில் தெளியும். அடுத்து, உப்பு மற்றும் முருங்கை விதையின் தூள் இரண்டையும் பசையாக்கிக் கலங்கிய நீரில் போடும்போது ஒரே நிமிடத்தில் நீர் தெளியும். இதன் மூலம் ஒரு கிராமத்தின் தண்ணீர்த் தேவையை ஈடு செய்ய முடியும். தண்ணீரைச் சுத்தமாக்கும் இந்தப் பசையை பாக்கெட்டுகளில் அடைத்துக் கிராமம் தோறும் விற்கலாம்; அல்லது இலவசமாக வழங்கலாம். இதனால் மக்கள் பயன் பெறுவர்.

தனர். இவர்களில், டெல்லியைச் சேர்ந்த சித்தார்த் பானர்ஜி முதல் பரிசு பெற்றார். பொள்ளாச்சியைச் சேர்ந்த மானஸா பரம சிவம் இரண்டாம் பரிசும், கொல்கத்தாவின் புஷ்ரா ஆலம் மூன்றாம் பரிசும் பெற்றனர்.

பரிசுத் தொகையாக முறையே ரூ.10,000/-, ரூ.7,500/-, ரூ.5,000/- மற்றும் சான்றிதழ்களைப் பெற்றனர். சிறந்த ஆலோசனைகளை சொன்னதற்காக, ராமநாதபுரம் மாணவர் அப்பாஸ் அலி சிறப்புப் பரிசு பெற்றார்.

அறிவு வளர்ச்சிக்கு உதவாத போட்டிகள், ஆட்டங்கள் போன்றவை ஊடகங்களில் நடைபெறுகின்ற இந்த வேளையில், மாணவர்களைச் சமூகப் பொறுப்புள்ளவர்களாக, அறிவியல் சிந்தனை கொண்டவர்களாக உருவாக்கும் இது போன்ற போட்டிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். எதிர்காலத்தில் இந்தியா நோபல் பரிசு பெற இது போன்ற உத்வேக முயற்சிகள் உதவும்.

சரி குட்டீஸ், இனி நீங்கள் சொல்லுங்கள். தண்ணீரை சேமிக்க, மறு சுழற்சியில் பயன்படுத்த, சிக்கனமாகச் செலவு செய்ய... உங்கள் ஐடியாக்களை எழுதி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்!

'நீலத் தங்கம் சேமிப்போம்' என்று கவர் மீது மறக்காமல் எழுதி அனுப்புங்கள்!

ஒருநாள் சராசரியாக ஒரு நாளைக்கு 53 லிட்டர் தண்ணீரைப் பயன் படுத்துவதாகக் கணக்கிட்டுள்ளனர். ஆனால், இந்தியாவில் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 20 லிட்டர் தண்ணீர்தான் கிடைக்கும் என்னும் நிலை ஏற்படவுள்ளது. உலக வெப்பமயமாதல், கடுமையான வறட்சி போன்றவற்றால் மேலும் தட்டுப்பாடு ஏற்படும்.

பூமியின் மேற்பரப்பை 71சதவீதம். தண்ணீர் சூழ்ந்திருந்தாலும், வெறும் 3 சதவீதம்தான் தூய்மையான நன்னீராகக் கிடைக்கின்றது. நீரினால் பரவும் நோய்களால் ஆண்டுதோறும் நான்கு பில்லியன் பேர் உலகெங்கும்




புஷ்ரா ஆலம், கொல்கத்தா

பல் துலக்க நாம் இரண்டு குவளை நீரை வீணடிக்கிறோம். உங்களுக்குப் பல் துலக்குவதற்கு இரண்டு குவளை நீர் போதுமானதாக இல்லையென்றால், சஹாரா பாலைவனத்தில் வாழும் மக்களைப் பற்றி யோசித்துப் பாருங்கள். துணி துவைப்பதற்கு அதிகமான நீர் செலவழிக்கிறோம். அதற்கு மாற்றாக 'சமூக துணி துவைப்பகங்களை' உருவாக்கலாம். கட்டடம் கட்டும் பணிகளுக்கு மழைநீர் சேகரிப்பின்போது சேகரித்த தண்ணீரைப் பயன்படுத்தலாம். நாளை என்பது நம்மிடம் இல்லை. எனவே, இன்றே நீர் சேகரிப்புப் பணியைத் தொடங்க வேண்டும். அப்போதுதான் தண்ணீர் பஞ்சமில்லாத எதிர்காலம் அமையும்.

பாதிக்கப்படுகின்றனர்.

'டெர்ராரியம்' என்னும் கண்ணாடி புட்டிக்குள் வளர்க்கும் செடிகள் மூலம் உலகம் வெப்பமயமாதலைத் தடுக்க முடியும். வீட்டுக்குள் ஏற்படுகின்ற காற்று மாசுபடுதலைத் தவிர்க்க 'ஹைட்ரோபோனிக்ஸ்' என்னும் செடிகளை வளர்க்கலாம். இதை நான் பயிலும் பள்ளி, மற்றும் வீட்டிலும் வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளேன்.





* சித்தார்த் பானர்ஜி, டில்லி.

குளியலுக்குப் பயன்படும் நீர், துணி துவைக்கப் பயன்படுத்தும் நீர் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளில் வழியும் நீரை முறைப்படுத்தி, செடிகளுக்கு ஊற்றலாம். பாய்ச்சலாம். தரையைக் கழுவதற்குப் பயன்படுத்தலாம். ஆனால், "கிணறு வற்றும்வரை, நீரின் மதிப்பை நாம் அறிந்து கொள்வதில்லை."

நாம் தண்ணீர்க் குழாயைப் பயன்படுத்தும் போதும், பல் துலக்கையிலும் கார் கழுவும் போதும், உணவுப் பொருட்களாக மாறும் காய்கறி, அரிசி ஆகியவற்றைக் கழுவும் போதும் நீரை சேமிக்க முடியும். அந்த நீரை தோட்டத்துக்கு பாய்ச்ச முடியும். சிக்கனமாய் செலவு செய்தால்!

முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்ற செட்டிநாடு வீடுகளிலும், இராஜஸ்தான் பகுதியில் உள்ள பழமையான வீடுகளிலும் 'மழைநீர் சேகரிப்பு' வசதி செய்யப்பட்டுள்ளது. இப்போது, கட்டப்படும் வீடுகளிலும் இதைச் செய்ய வேண்டும். நிலத்தை நன்றாக உழுவது, உப்பு நீரையும் ஏற்றுக்கொள்ளும் செடிகளை உருவாக்குவது, சொட்டுநீர்ப் பாசனத்தை மேம்படுத்துவது, மாற்றுப் பயிர்களைப் பயிரிடுவது... போன்ற வழிகளில் நீரைச் சேமிக்க முடியும். ஜெய்ப்பூரைச் சேர்ந்த 'அஜித் பவுண்டேஷன்' என்னும் அமைப்பு நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த 'ஜல் சித்ரா' (நீர் வரைபடம்) வெளியிட்டுள்ளது. கோவையில் உள்ள 'சிறுதுளி' என்னும் அமைப்பு ஆறு, ஏரி, குளங்களைத் தூய்மை செய்யும் பணியை அரசு மற்றும் ஆர்வலர்கள் துணையோடு செய்கிறது. எனவே, தண்ணீரைப் பேணிப் பாதுகாப்பதும் சமூக சேவைகளில் ஒன்றுதான். 'நீரின்றி அமையாது உலகு' என்று வள்ளுவர் கூறியதை மறக்க முடியுமா?



* மானஸா பரமசிவம், பொள்ளாச்சி

பெட்டிச் செய்திகள்: **நளினி சம்பத்குமார்**

முனிவர் தந்த வரம்!



"ஓநா... கொழுத்த ஆட்டுக்குட்டி.'' நாக்கை சுழற்றியபடியே மெல்ல மேலேறியது ஓநாய். அது வருவதைக் கவனிக்காமல் மேய்ந்து கொண்டிருந்தது ஆட்டுக்குட்டி.

புதர்களுக்குள் மறைந்து மேலேறிய ஓநாய் திடீரென்று அதிர்ந்தது. ஆட்டுக்குட்டி இருந்த மலை உச்சிக்குப் போக முடியாமல் நடுவே பெரும்பள்ளம்! தவறி விழுந்தால் அவ்வளவுதான். என்ன செய்வது என்று யோசித்த ஓநாய், ஆட்டை அழைத்தது.

''நண்பா, அந்த உச்சியில் நின்று வறண்டு போன புல்லைப் போய் சாப்பிடுகிறாயே. கீழே இறங்கி வா. அருமையான புல்வெளியே உனக்காகக் காத்துக்கிடக்கிறது.''

ஓநாயின் குரலை கேட்டுத் திரும்பியது ஆட்டுக்குட்டி.

''ஓ... இதுதானே நேற்று ஒரு முயலைத் துரத்திச் சென்று பிடித்தது. இன்று நம்மிடம் நட்பு பாராட்டுவது எதனால்? நம்மைப் பிடிக்கத்தான் இந்த சூழ்ச்சியா?'' என்று நினைத்தது ஆட்டுக்குட்டி.

கூப்பிட்ட பிறகும் ஆடு மௌனமாக நின்றவுடன், ஓநாய் மீண்டும் அழைத்தது.

''நண்பா, உன்னுடைய நன்மைக்காகத்தான் சொல்கிறேன். பார்... நீ எப்படி இளைத்துக் கிடக்கிறாய். சத்தே இல்லாத உணவை உண்பதால்தான் இப்படி மெலிந்திருக்கிறாய். இறங்கி வா. பசுமையான தழை அதிகமிருக்கிறது இங்கே. அதைச் சாப்பிட்டு வலிமை பெறு!''

ஓநாய் சொல்வதன் உட்பொருள் ஆட்டுக்குட்டிக்குப் புரிந்திருந்தது.

''நண்பா, உனக்குத்தான் என்மேல் எவ்வளவு அக்கறை. நீ சொன்னபடி நான் கீழே வரலாம்தான். அந்தப் புல்லை சாப்பிட்டால் நான் மேலும் வலிமையும் பொலிவும் பெறுவேன். ஆனால், அதில் ஒரு ஆபத்து இருக்கிறது.''

ஆட்டுக்குட்டி சொல்லி முடித்தவுடன், பேசியது ஓநாய் -

''என்ன ஆபத்து? நான் உன்னை எதுவும் செய்யமாட்டேன். என்னை நம்பு'' என்றது அவசரமாக.

அதைக் கவனித்த ஆடு ஏளனமாகச் சொன்னது.



''சேச்சே... அதல்ல என் கவலை! வேறு யாருக்கும் என்னால் ஆபத்து வரக் கூடாதே என்று கவலைப்படுகிறேன்.''

''என்ன உளறுகிறாய் நண்பா? உன்னால் ஆபத்தா?'' ஆச்சர்யமாய்க் கேட்டது ஓநாய்.


உருவகக் கதை

- பி.எஸ். ஜேம்ஸ்

''ஆமாம். இங்கே ஒரு முனிவர் தவமிருக்கிறார். அவர் எனக்கு ஒரு வரம் கொடுத்திருக்கிறார். 'என்னை யார் கொல்ல முயன்றாலும், அவர்கள் தலை வெடித்துச் சிதறிவிடும்' என்று. இது தெரியாமல் யாராவது என்னைக் கொல்ல முயன்றால், அவர்களுக்கும் ஆபத்து வருமே. அதனால்தான் யோசிக்கிறேன்.''

ஆட்டுக்குட்டி சொன்னதைக் கேட்டவுடன் குலை நடுங்கியது ஓநாய்க்கு.

''என்னது? தலை வெடித்துவிடுமா? நீ அங்கேயே இரு நண்பா. முதலில் நான் பிழைத்துக்கொள்கிறேன்'' என்று ஓட்டம் எடுத்தது ஓநாய். ஆட்டுக்குட்டி அதைப் பார்த்து சிரித்தபடியே நின்றது.



* வாரங்கல், காகதீய நுழைவாயில்



* கோல்கொண்டா கோட்டை



* செரியல் ஓவியங்கள்



* சிம்ஹாசலம்



தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்களில் ஒன்றான ஆந்திரப் பிரதேசம், அகில இந்திய அளவிலான வரிசைப் பட்டியலில் மக்கள் தொகையில் ஐந்தாம் இடத்தையும், பரப்பளவில் நான்காவது இடத்தையும் பிடிக்கிறது. 1947ல், இந்தியா சுதந்திரம் பெற்ற சமயத்தில், ஆந்திரப் பிரதேசம் என்று ஒரு மாநிலம் இருக்கவில்லை. ஆந்திராவின் பெரும்பகுதி, தமிழ் நாட்டுடன் இணைந்து சென்னை ராஜதானி என்று அழைக்கப்பட்டது. ஹைதராபாத் தனி மாநிலமாக இருந்தது. தெலுங்கை தாய் மொழியாகக் கொண்ட மக்கள் 'தங்களுக்கென்று ஒரு தனி மாநிலம் வேண்டும் என்றும், அதில் சென்னை மாநகரம் இருக்க வேண்டும்' என்றும் கோரினார்கள்.

1952 அக்டோபர் 19ஆம் தேதி, பொட்டி ஸ்ரீராமுலு தனி மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தி சாகும்வரை உண்ணாவிரதம் துவங்கினார். இது தெலுங்கு பேசும் மக்களிடையே உணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தியது. தொடர்ந்து டிசம்பர் 15ஆம் தேதி நிகழ்ந்த பொட்டி ஸ்ரீராமுலுவின் மரணம், மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அதன் விளைவாக தெலுங்கு

பேசும் மக்கள் வசிக்கும் பதினோரு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, ஆந்திரப் பிரதேசம் என்ற தனி மாநிலம் உருவானது.

நிஜாமின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக விளங்கியது ஹைதராபாத். பின்னர் அதுவும் ஆந்திர மாநிலத்திலிருந்து இணைக்கப்பட்டது. இதன் பிறகு 1952ல் நடைபெற்ற முதல் தேர்தலில் வென்று ராம கிருஷ்ணராவ் ஆந்திராவின் முதலமைச்சரானார். காலப்போக்கில் புதிய மாவட்டங்கள் பல உருவாக்கப்பட்டன. இன்று சுமார் 26 ஆயிரத்து 600 கிராமங்களும், 210 நகரங்களும் கொண்ட ஆந்திரப் பிரதேசத்தில் மொத்தம் 23 மாவட்டங்கள் உள்ளன. கோதாவரியும், கிருஷ்ணாவும் ஆந்திராவில் பாயும் முக்கிய நதிகள்.

இந்திய நாடு... – 12

– கௌதம்ராம்

பொதுவாக ஆந்திராவை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அனந்தப்பூர், சித்தூர், கடப்பா, கர்நூல் ஆகிய நான்கு மாவட்டங்கள் அடங்கிய 'ராயலசீமா' பகுதி; கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா, நெல்லூர், ப்ரகாசம், ஸ்ரீகாகுளம், விசாகப்பட்டினம், விஜய நகரம் ஆகிய மாவட்டங்கள்

* ரிஷி கொண்டா

தெனாலிராமனின் தேசம்!



அடங்கிய கடலோர ஆந்திரப் பகுதி; ஹைதராபாத், கரீம் நகர், கம்மம், மேடக், ரங்கா ரெட்டி உள்ளிட்ட பகுதிகள் அடங்கிய தெலுங்கானா பகுதி 'பல்லாண்டுகளாகவே, 'தெலுங்கானா' மிகவும் பின் தங்கிய பகுதியாக இருந்து வந்துள்ளது. 'அதனைத் தனி மாநிலமாக உருவாக்கினால் தான், அப்பகுதி முன்னேறும்' என்பதை வலியுறுத்தி, பல் வேறு அரசியல் கட்சிகளும் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.



* அனந்தகிரி அருவி

சுமார் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் ச.கி.மீ. பரப்பளவு கொண்ட ஆந்திரப் பிர தேசத்தின் மக்கள் தொகை ஏழு கோடியே 62 லட்சம். இதில் எழுதப் படிக்கத் தெரிந் தவர்கள் சுமார் 60 சதவிகிதம். மாநிலத்தின் முக்கிய மொழிகள் : தெலுங்கு, உருது. இந்தியாவில், இந்திக்கு அடுத்து, அதிக மக்கள் பேசும் மொழியும் இதுவே. ஆந்திர மாநிலத்திலிருந்து பாராளுமன்றத்தின் லோக்சபாவுக்கு 42 உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்படுக்கிறார்கள். ஆந்திராவுக்கான ராஜ்யசபா எம்.பி.க்களின் எண்ணிக்கை 18. ஆந்திர மாநில சட்டமன்றம் 294 தொகுதிகளைக் கொண்டது.

ஆந்திரப் பகுதியின் சரித்திரம் மிகவும் தொன்மையானது. மௌரியர்கள், சாத வாகனர்கள், பல்லவர்கள், சோழர்கள், சாளுக்கியர் கள், காகதீயர்கள், பாமினி, வம்சத்தினர்; அதனைத் தொடர்ந்து முகலாய மன்னர்கள் மற் றும் சுல்தான்களின் ஆட்சி; பிறகு ஆங் கிலேயர் ஆட்சி... என பலரின் ஆளுகையைக் கண்டது ஆந்திரம்.

* விசாகப்பட்டிணம்



சுதந்திரப் போராட்டத்தின்போது, ஆந் திராவைச் சேர்ந்த பலர் முக்கிய பங் காற்றினார்கள். அவர்களில் கொண்டா வெங்கடப்பய்யா, டி.பிரகாசம் பந்துலு, புலுசு சாம்பமூர்த்தி, பட்டாபி சீத்தாரா மய்யா போன்றவர்கள் முக்கியமானவர் கள். காந்திஜி நடத்திய உப்புச் சத்தியா கிரகம், ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் போன்றவற்றில் மக்கள் ஏராளமாகப் பங்கேற்று பிரிட்டிஷ் ஆட் சிக்கு எதிராக தங்கள் உணர்வை வெளிப் படுத்தினார்கள்.

பழங்காலக் கோவில்கள் நிறைந்த மாநிலம் ஆந்திரப் பிரதேசம். உத்திரப் பிர தேசம், பீகாரை அடுத்து பௌத்த மதம் சம்பந்தப்பட்ட கோயில்களும், ஸ்தூபா மற்றும் சிற்பங்களும் பெருமளவில் கொண் டது ஆந்திரா. அவற்றில் விஜயவாடா வுக்கு அருகில் உள்ள அமராவதி, குண்டு பள்ளே, உந்தவள்ளி, விசாகப்பட்டினத் துக்கு அருகில், உள்ள சங்காராம், நெல்லூர் அருகில் உள்ள பைரவகொண்டா, ஹைதரா பாத் அருகில் உள்ள நாகார்ஜுனகொண்டா போன்றவை குறிப்பிடத்தக்கவை.

திருப்பதி, காளஹஸ்தி, ஸ்ரீசைலம்,

அஹோபிலம், மட்டபல்லி, சிம்ஹாசலம், போன்றவை புகழ் பெற்ற ஆலயங்கள். தஞ்சை பெரிய கோயிலைப் போலவே, லெபாக்ஷியில் பிரம்மாண்டமான நந்தியின் சிற்பம் உள்ளது. கோல்கொண்டாவில் உள்ள கோட்டை மிகவும் பிரம்மாண்டமானது.

ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரம் ஐதராபாத். ஐதராபாத்துடன் இணைந்த இன்னொரு நகரம் செகந்திராபாத். இவை 'இரட்டை நகரங்கள்' என்று குறிப்பிடப்படுகின்றன. இரு நகரங்களையும் உசைன்சாகர் ஏரி பிரிக்கிறது. அந்த ஏரியின் மத்தியில் கம்பீரமாக நிற்கும் கௌதம புத்தரின் சிலை மிகவும் பிரபலமானது. ஹைதராபாத் என்றதும் உடனே நினைக்கு வருவது 'சார்மினார்'. தவிர பிர்லா மந்திர், லும்பினி



* நாகார்ஜுனசாகர் அணை

பூங்கா, சலார்ஜங் அருங்காட்சியகம் உள்ளிட்ட பல இடங்கள் சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டியவை.

கலைப் பொருட்களுக்கும் ஆந்திரப் பிரதேசம் பெயர் பெற்றது. உலோகப் பொருட்களில் வெள்ளிக் கம்பிகளைப் பொறுத்தி உருவாக்கப்படும் பித்ரி கலைப் பொருட்கள்; துணிகளில் வரையும் கலம்கரி ஓவியங்கள்; மிக லேசான மரங்களைக் கொண்டு தயாரிக்கும் வண்ணமயமான



* உசைன் சாகர் ஏரி

விளையாட்டு பொம்மைகள்; கற்களிலும், மரத்திலுமான சிற்ப வேலைபாடுகள் போன்றவை ஆந்திராவுக்குப் பெருமை சேர்ப்பவை.

போச்சம்பள்ளி, வேங்கடகிரி, நாராயண பேட் போன்ற ஊர்களில் தயாராகும் புடைவைகளுக்கு நாடெங்குள் பெரும் வரவேற்பு உண்டு. ஏலூரு, வாரங்கல் ஆகிய ஊர்களின் தரைவிரிப்புகளும் புகழ்பெற்றவை.

பதினோராம் நூற்றாண்டிலேயே தெலுங்கு மொழியில் சிறந்த இலக்கியங்கள் படைக்கப்பட்டன. கிருஷ்ணதேவராயரது காலம் 'தெலுங்கு இலக்கியத்தின் பொற்காலம்' என வர்ணிக்கப்படுகிறது. அவருடைய அவையை அலங்கரித்த விகடகவி தெனாலிராமனின் கதைகள் மிகவும் புகழ் பெற்றவை. கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு, 'நவீன தெலுங்கு இலக்கியத்தின் தந்தை' என்று போற்றப்படுகிறார்.

விவசாயம்தான் ஆந்திராவின் மிக முக்கியத் தொழில். நெல் தவிர, கம்பு, கேழ்வரகு, ஆமணக்கு, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு, பருத்தி, புகையிலை ஆகியவை ஆந்திராவின் முக்கிய விளைபொருட்கள். விசாகப்பட்டினம் முக்கியத் துறைமுகம். 'குச்சிப்புடி' ஆந்திரத்துக்கே உரிய சிறப்பான நடனம்!

ப த்தாம் வகுப்பு படிக்கும் மாணவரா நீங்கள்? பன்னிரண்டாம் வகுப்பு? அப்படியானால், நீங்கள் அவசியம் படிக்க வேண்டிய பகுதி இது. Ripe Institute-ஐச் சேர்ந்த ஹேமா பிரபாகர் உங்கள் வெற்றிக்கு வழிகாட்டப் போகும் பகுதி இது.



- ஹேமா பிரபாகர் -



வெற்றி

மாணவச் செல்வங்களே!

தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கிறது. படிப்புச் சுமையோ பயமோ உங்களைத் துரத்திக் கொண்டிருக்கும். பெற்றோர்களும் 'கவனமா படி', 'இன்னொரு முறை ரிவைஸ் பண்ணு' என்று எச்சரித்துக் கொண்டிருப்பார்கள்! அதன் காரணமாக உங்களின் மனஅழுத்தம் மேலும் அதிகமாக இருக்கும்.

ஆனால், அச்சமோ, கவலையோ அவசியமே இல்லை.

நீங்கள் ஒரு பாடத்தை எப்படி புரிந்து கொண்டிருக்கிறீர்கள்? அதிலிருந்து கேட்கப்படும் கேள்வியைப் புரிந்து கொண்டு எப்படி பதிலளிக்கிறீர்கள்? அந்த பதிலை குறிப்பட்ட காலத்துக்குள் தரும் வேகம் உங்களிடம் இருக்கிறதா?

இந்த மூன்றும்தான் ஒரு தேர்வின் அடிப்படை. இந்த மூன்றையும் நீங்கள் எப்படிச் செய்கிறீர்கள் என்று மதிப்பிடும் முயற்சிதான் தேர்வு!

பள்ளித் தேர்வு மட்டுமல்ல; வாழ்வில் நாம் பெறுகின்ற எல்லா வெற்றிகளின் அடிப்படையும் இதுதான்.


சரி; பொதுத் தேர்வை எதிர்கொள்ளப் போகும் உங்களுக்கான சில டிப்ஸ் :

1. நேரத்தைத் திட்டமிடல்
2. உடல் ஆரோக்கியம்
3. பாஸிடிவ் திங்கிங்
4. உடற்பயிற்சி
5. மனஅழுத்தமின்றி இருத்தல்
6. முழுத்திறன் செயல்பாடு

❋ நேரத்தைத் திட்டமிடுவது என்பது பள்ளியில் பண்படுத்திய டைம்-டேபிள் விஷயமல்ல. உங்களால் முழுக் கவனமும் செலுத்திப் படிக்க முடியும் நேரம் எதுவோ, அதுவே நீங்கள் பரீட்சைக்குப் படிக்கும் நேரமாக இருக்க வேண்டும். குறிப்பாக, ரிவைஸ் செய்யும்போது, அந்த நேரத்தை முழுமையாகப்



தேர்வுக்கு சில டிப்ஸ்!



நிச்சயம்!

பயன்படுத்துங்கள். நீங்கள் படித்த விஷயங்கள் பளிச் சென்று மனத்தில் பதியும்.

அதேசமயம், அரைமணி நேரம் தமிழ், ஒரு மணி நேரம் ஆங்கிலம், ஒரு மணி நேரம் கணக்கு என்று அடுத்தடுத்து இயங்காதீர்கள். ஒரு பாடத்தை முடித்தால், பிறகு சற்று நேரம் கண்மூடிப் படித்ததை நினைவு கூருங்கள்.

இதனால், படித்ததைச் சரியாக உள்வாங்கி யிருக்கிறோமா என்பது தெளிவாக நமக்குப் புரிந்துவிடும். ஏதேனும் சந்தேகம் வந்தால், மீண் டும் ஒருமுறை அதைப் பார்க்கவும் முடியும். இப்படிச் செய்வதன் மூலம், தேவையற்ற மனக்குழப்பமும், அச்ச மும் விலகிவிடும்.

✸ தேர்வுக்காகப் படிக்க வேண்டியது அவ சியம்தான். அதற்காக உணவிலோ, உறக்கத் திலோ அலட்சியமாக இருக்கவேண்டாம். நீங்கள் படித் ததை நன்கு புரிந்துகொள்ளவும், புரிந்ததைத் தெளிவாக எழுதவும் உடல் ஆரோக்கியமாக இருப்பது அவசியம். அதனால், நேரத்துக்குச் சாப்பிடுங்கள். கண்விழித்துப் படித்தால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்றில்லை. வீணாக தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு உட்கார்ந்திருக்காதீர்கள்.

உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி படிக்க முடிந்தால் மட்டுமே, கண்விழிப்பு பயனுள்ளதாய் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

✸ 'நம்மால் முடியுமா?' என்பது போன்ற சந்தேகங்கள், 'அடடா, என்ன ஆகுமோ?' என்கிற கவலை; 'என்ன பண்ணப் போறோம்?' போன்ற பயம்; பதற்றம் இவை யெல்லாம் நம் செயல்திறனைப் பாதிக்கும்.

இந்த மாதிரியான உணர்வுகள், நாம் நன்றாக அறிந்த பகுதிகளைக் கூடச் சரியாக எழுத முடியாமல் தடுமாற வைக்கும்.

எனவே, 'எனக்குத் தெரியும்', 'என்னால் முடியும்' 'நான் வெற்றி பெறுவேன்' என்பது போன்ற நேர்மறை எண்ணங்களை எப்போதும் நினையுங்கள். ஏதோவொரு சந்தர்ப்பத்தில் மற்றவர்கள் பாராட்டியதை நினைவு கூருங்கள். இவை உங்கள் நம்பிக்கையையும், செயலாற்ற

லையும் அதிகரிக்கும்.

✸ உடற்பயிற்சி என்றவுடன், உங்களுக்குத் தெரிந்த ஆசனங்கள் செய்வது, 'ஜிம்'முக்குப் போவது என்று பொருளல்ல. அமர்ந்தபடியே படித்துக் கொண்டிருந்தால், உடல் சற்று மந்தமாகக்கூடும். அதை சுறுசுறுப்பாக்க நடைப்பயிற்சி, ஓட்டம், மாடிப்படி ஏறி இறங்குதல்... என்று சிறிய அளவில் பயிற்சி செய்யுங்கள். தன்னால் உடல் மீண்டும் சுறுசுறுப்படையும்.

✸ மனத்தை எப்போதும் சுமையின்றி வைத்துக் கொள்ளுங்கள். எப்போதோ எவரோ செய்த கேலி, கடுஞ்சொற்கள் என்று எதையும் மனத்தில் மூடி வைக்காதீர்கள்.

அடிக்கடி 'நல்லாப் படி' என்று பெற்றோர் சொல்வதும், 'பாஸ் பண்ணுவியா' என்று பிறர் கேலி செய்வதும், நாம் வெற்றி பெற வேண்டும் என்கிற அக்கறையின் வெவ்வேறு வடிவங்கள் என்று நினையுங்கள். இப்படி நினைத்தால், யார் மீதும் கோபமோ வெறுப்போ ஏற்படாது.

கோபம், வெறுப்பு இல்லையென்றால் மனஅழுத்தம் என்பதே உங்களை அணுகாது. உங்களால் தெளிவாக சிந்திக்கவும், செயல்படவும் முடியும். படிப்பதற்கு இடையே சிறிது நேர ஓய்வாக மென்மையான நல்ல இசை கேட்பதும் இதற்கு உதவும்.

✸ முழுத் திறனோடு செயல்படுவது இறுதி விஷயம். அதென்ன முழுத்திறன்? உங்கள் மனம், அறிவு, சிந்தனை எல்லாமே ஒருமுகப்பட்டு தேர்வை நோக்கி இயங்க வேண்டும். அப்போது உங்கள் செயலில் ஒரு முனைப்பும், நேர்த்தியும் இருக்கும். சரியான திட்டமிடல் இருக்கும். 'இவை தேவை, இவை வேண்டாம்' என்கிற தெளிவும், 'இதுதான் சரி' என்கிற உறுதியும் இருக்கும்.

தேர்வை எதிர்கொள்ளப் போகும் நீங்கள் பின்பற்ற வேண்டிய அடிப்படையான சில விஷயங்களை இப்போது பார்த்தோம். மேலும் சில செய்திகள் உண்டு. அவை அடுத்த இதழில்!

(தொடரும்)



மனம், அறிவு, சிந்தனை எல்லாமே ஒருமுகப்பட்டு தேர்வை நோக்கி இயங்க வேண்டும். அப்போது உங்கள் செயலில் முனைப்பும் நேர்த்தியும் இருக்கும்!

தேடி வரும் கோகுலம்; படிக்கப் படிக்க குதூகலம்!



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

ஹலோ, கோகுலம் குட்டீஸ்! நலம் தானே? உங்கள் பாடப்புத்தகங்களில் 'வைட்டமின்'களைப் பற்றி நிறைய படித்திருப்பீர்கள். அந்த வைட்டமினை முதன்முதலில் கண்டுபிடித்தவர் டாக்டர் கேசிமிர் ஃபங்க்!

இவர் போலந்து நாட்டைச் சேர்ந்த உயிர் வேதியியலாளர். அந்த நாட்டில் 'வார்ஷா' எனும் ஊரில் 1884ம் ஆண்டு

அரிதாக இருந்தது. மிகப்பெரிய மனிதர்களிடமிருந்து சிபாரிசு இருந்தால் மட்டுமே இவர்களுக்குப் பள்ளியில் இடம் கிடைக்கும். ஆகவே, கேசிமிர் ஃபங்க் பள்ளியில் இடம் கிடைக்கும் வரை வீட்டிலேயே படித்தார்.

1900ல் சுவிட்சர்லாந்தின் 'ஜெனிவா பல்கலைக்கழக'த்தில் இளங்கலைப் பட்டமும், ஜெர்மனியில் 'பெர்ன்



பலே ஃபங்க்!

பிப்ரவரி 23ம் நாள் பிறந்தார். இவருடைய தந்தை 'ஜேக்குவஸ் ஃபங்க்', ஒரு பிரபல தோல் மருத்துவர். இவர் வாழ்ந்த காலத்தில் போலந்து நாடு ருஷ்யா நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனால், போலந்துக்காரர்களுக்குப் பள்ளிகளில் இடம் கிடைப்பது

பல்கலைக்கழக'த்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார். 1904ல் பி.ஹெச்.டி. பட்டம் பெற்றார். அதன் பின்னர் பாரிசில் இருக்கும் 'பாஸ்டர் இன்ஸ்டிட்யூட்'டில் தமது மேற்படிப்பைத் தொடர்ந்தார். அப்போதுதான் அவருக்கு வேதிப் பொருட்களை ஆராய்ச்சி செய்யும்

ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங் - 12

- டாக்டர் கு. கணேசன்



ஆர்வம் பிறந்தது.

அதைத் தொடர்ந்து 1906ல் 'பெர்லின் பல்கலைக்கழகத்'தில் வேலைக்குச் சேர்ந்தார். அங்குப் புரத மூலக்கூறுகளின் 'வளர்சிதை மாற்றம்' குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அப்போது உடன் பணிபுரிந்த மூத்த ஆராய்ச்சியாளருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், அந்த வேலையை விட்டுவிட்டு, ஜெர்மனியிலிருந்து கிளம்பி இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு 'லிஸ்டர் இன்ஸ்டிடியூட்'டில் இளநிலை ஆராய்ச்சியாளராகப் பணியில் சேர்ந்தார். அங்கு ஆராய்ச்சித் துறைத் தலைவராக இருந்த 'சார்லஸ் மார்ட்டின்' என்பவர் 'பெரிபெரி' எனும் நோயைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்படி இவரைப் பணித்தார்.

'பெரிபெரி' என்பது ஒரு நரம்பு நோய். இந்த நோய் வந்தவர்களுக்கு



நரம்புகளில் வலி ஏற்படும். பக்க வாதம் வரும். உடல் செயல் இழக்கும். நாளடைவில் இவர்கள் முடமாகிவிடுவார்கள். இங்கிலாந்தில் 'ஓரியண்ட்' எனும் பகுதியில் இந்த நோயுள்ளவர்கள் அதிக அளவில் இருப்பதை அறிந்து ஃபங்க் அங்கு நேரில் சென்றார். இயந்திரத்தில் அரைத்து உமி நீக்கப்பட்ட அரிசியை உணவாகப் பயன்படுத்தும் மக்களுக்கே இந்த நோய் வருவதைத் தெரிந்து கொண்டார்.

இவர் 1873ல் செய்த சில ஆராய்ச்சிகளின் விளைவாக, உணவுச் சத்துக்கள் உடலில் குறைந்தால் நோய் வரும் என்று ஏற்கெனவே கண்டுபிடித்திருந்தார். எப்படியெனில், ஒருமுறை நன்கு கழுவப்பட்ட இறைச்சியை நாய்களுக்குத் தொடர்ந்து சாப்பிடக் கொடுத்தபோது, அவை வயதுக்கு ஏற்ற வளர்ச்சி பெறவில்லை. ஆகவே அந்த இறைச்சியில் நாய்க்குத் தேவையான அளவுக்கு சத்து இல்லை என்று முடிவு செய்திருந்தார். அதேபோல் 'ஓரியண்ட்' பகுதி மக்கள் சாப்பிடும் உணவில் ஏதோ ஒரு குறை இருப்பதாக நினைத்தார்.

அதேநேரத்தில் இந்தோனேசியாவில் வாழ்ந்த டச்சு நாட்டு ஆராய்ச்சியாளர் 'எய்க்மேன்' என்பவர், கோழிக்குஞ்சுகளுக்கு அரிசி உமிகளை உணவாகக் கொடுத்தால் அந்த நோய் சரியாகிவிடுகிறது என்றும் கண்டுபிடித்திருந்தார். ஆனால் அரிசியில் உள்ள ஏதோ ஒரு நச்சப்பொருள்தான் இப்படி நோயை உண்டாக்குகிறது என்று அவர் தவறாகக் கணித்துவிட்டார். அதேவேளையில் அரிசி உமியில் இருக்கும் ஏதோ ஒரு பொருள் இந்த நோயைக் குணப்படுத்துகிறது என்று மட்டும் சொல்லியிருந்தார்.

மருத்துவ மேதைகள் :

சார்லஸ் டார்வின்

'பரிணாம வளர்ச்சியின் தந்தை' என்று புகழப்படுபவர் 'சார்லஸ் டார்வின்' இவர் 12.2.1809 அன்று இங்கிலாந்தில் ஷ்ராப்ஷையர் மாவட்டத்தில் ஷ்ரூஸ்பரி எனும் ஊரில் பிறந்தார். எடின்பரோ பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயிரியலும் படித்தார். இவர் படித்தது மருத்துவம் என்றாலும் இயற்கையியல் ஆராய்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டார். 1831ல் தென் அமெரிக்கா மற்றும் தென்கடலுக்கு கப்பலில் ஆராய்ச்சிப் பயணம் மேற்கொண்டார்.

அப்போது இவர் நடத்திய உயிரியல் மற்றும் நில இயல் ஆராய்ச்சிகளின் விளைவாக, பரிணாமக் கொள்கைகளின் அடிப்படை எனக் கருதப்படும் இயற்கைத் தேர்வு எனும் முக்கியமான கண்டுபிடிப்பை வெளியிட்டார். அதாவது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள பறவைக் கூட்டத்தில் நீண்ட அலகுள்ள பறவைக்கே உயிர்வாழவும் இனப்பெருக்கம் செய்யவும் அதிக வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்தார். அந்தச் சிறப்புத் தன்மை அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கப்படும் போது, பிற்கால உயிரினத்தில் அவையே ஆதிக்கம் செலுத்தும் என்று தெரிவித்தார். இதன் பலனாக, ஓரி

ஆனால் என்ன பொருள் என்பதை அவர் கண்டுபிடிக்கவில்லை.

1900ல் 'சர் பிரடெரிக் ஹாப்கின்ஸ்' என்பவர், சுண்டெலிகளுக்குப் பால் தராவிட்டால் அவற்றின் வளர்ச்சி தடைபடுகிறது என்றும், பாலில் உள்ள ஏதோ ஒரு சத்து உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படுகிறது என்றும் கூறியிருந்தார். இவை



எல்லாமே ஃபங்க்கை யோசிக்க வைத்தன. ஆகவே உணவுக்கும் நோய்க்கும் உள்ள தொடர்பு குறித்து தீவிரமாக ஆராய்ச்சி செய்யலானார்.

ஃபங்க் தமது ஆராய்ச்சியின் முதல் படியாக 'ஓரியண்ட்' பகுதி மக்களின் ஒரு பகுதியை இரு குழுக்களாகப் பிரித்துக் கொண்டார். ஒரு குழுவுக்கு அரிசியை அரைக்காமல் முழு அரிசியைக் கொடுத்தார். முழு அரிசியை உணவாகச் சாப்பிட்டவர்களுக்கு 'பெரிபெரி' நோய் வரவில்லை. உமி நீக்கிய அரிசியைச் சாப்பிட்ட மக்களுக்கு மட்டுமே நோய் வந்தது. ஆகவே அரிசியை இயந்திரத்தில் கொடுத்து அரைக்கும்போது அகற்றப்படுகின்ற உமியில்தான் விஷயம் உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டார்.

ணத்தில் பயன்தரக்கூடிய மாறுபாடுகள் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகின்றன எனவும், பயனில்லாத மாறுபாடுகள் காலப்போக்கில் மறைந்து விடுகின்றன என்பதையும் செயல்முறையில் விளக்கினார். இந்தக் கொள்கை குறித்து இருபதாண்டுகள் ஆராய்ச்சி செய்து 'தி ஆரிஜின் ஆஃப் ஸ்பீசிஸ் பை மீன்ஸ் ஆஃப் நேச்சுரல் செலக்ஷன்' எனும் நூலை எழுதினார். இது அறிவியல் அறிஞர்களிடம் பெரும் வரவேற்பையும் புகழையும் பெற்றது. அதேநேரத்தில் மதத் தலைவர்களிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியது. என்றாலும், உயிர்களின் வளர்ச்சி மாற்றத்துக்கு விளக்கமாக டார்வின் முன்மொழிந்த தத்துவம்தான், நவீன பரிணாமக் கொள்கையின் அடிப்படையாக அமைந்தது.



பின்னர் அவர், அரிசி உமியை மட்டும் சேகரித்துக் கூழாக்கினார். அதன் மூலக்கூறுகளை ஒவ்வொன்றாகப் பிரித்து ஆராய்ந்தார். அப்போது உமியில் மிகக் குறைந்த அளவில் ஒரு வேதிப்பொருள் இருப்பதைக் கண்டுபிடித்தார். அது உணவில் இல்லாவிட்டால், அதைச் சாப்பிடும் மனிதனுக்குப் பெரிபெரி நோய் வந்துவிடும் என்பதையும் நிரூபித்தார். மருத்துவ உலகம் அவருடைய கண்டுபிடிப்பை ஒத்துக் கொண்டது.

1912ல் ஃபங்க் தாம் கண்டுபிடித்த அந்த வேதிப்பொருளுக்கு 'வைட்டமின்' என்று பெயரிட்டார். விடா (Vita) என்றால் முக்கியம் என்றும், அமின் (amine) என்றால் நைட்ரஜன் கலந்த ஒரு வேதிப்பொருள் என்றும் பொருள். அதாவது வைட்டமின் என்றால், ஒரு முக்கியமான உணவுப் பொருள் என்று கூறினார். உலகில் வைட்டமின் எனும் சொல் பிறந்தது இப்படித்தான். அவருக்குப் பிறகு வந்த ஆராய்ச்சியாளர்கள், 'உமியில் இருக்கும் அந்த வேதிப்பொருள் அமைன் வகையைச் சேர்ந்ததில்லை' என்று கண்டறிந்ததால், அதற்குத் 'தயமின்' என்று பெயரிட்டனர்.

ஃபங்க் செய்த ஆராய்ச்சியை ஒட்டி அதன் பின்னர் வைட்டமின் பற்றியும், அதன் வகைகள் பற்றியும் பலர் ஆராய்ச்சி செய்தனர். என்றாலும் அவற்றுக்கு அடிப்படை ஃபங்க் கண்டுபிடித்ததுதான்!

புரிந்ததா, குட்டீஸ்? இனி அடுத்த மாதம் இன்னொரு புதிய கண்டுபிடிப்பைத் தெரிஞ்சுக்குவோம். பை!

முளைக்காத

கீழை நாடு ஒன்றில் வாழ்ந்த ஏழை இளைஞன் லிங். அவன் உழைத்துப் பொருளீட்டி தன் தாயைக் காப்பாற்றி வந்தான். அந்த நாட்டு அரசன் முற்போக்குவாதி. தனக்குப்பிறகு தனது மகன்தான் முடி சூடிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவன். தன் நாட்டுக் குடிமக்களுள் தகுதிமிக்க ஒருவரைத் தேர்ந்தெடுக்க எண்ணினான்.

அதற்காக இளைஞர்கள் அனைவரையும் அவன் ஒன்று கூட்டினான். அவர்களிடம் ஆளுக்கொரு விதையைத் தந்து, ''உங்களில் ஒருவர் மன்னனாக வாய்ப்பு உள்ளது. இதை மண் தொட்டியில் இட்டு நீர் ஊற்றி, உரமிட்டுப் பராமரித்து நன்கு வளர்த்து வாருங்கள். ஓராண்டு கழித்து மீண்டும் சந்திக்கிறேன்'' எனக்கூறி அனுப்பி வைத்தான்.

விதையைப் பெற்றவர்களில் லிங்கும் ஒருவன். அதைப் பெற்றுக் கொண்டதும் வீட்டுக்குச் சென்று தாயிடம் தந்து விவரமும் சொன்னான். மண் தொட்டி வாங்கி அதில் மண், உரம் இட்டு நட்டு வைத்த அவள், ''தினசரி நீர் ஊற்றிப் பராமரித்து வா மகனே'' என அன்புக் கட்டளையிட்டாள்.

ஒரு மாதம் கழிந்தது. ஒன்றுமே வரவில்லை. லிங் ஏமாற்றமடைந்தான். தாய்க்கு அதைவிட ஏமாற்றம். அன்று மாலை சக தோழர்களைச் சந்தித்தபோது அவர்கள் அனைவரும் ''விதை 'ஆகா ஓகோ' என்று வந்திருக்கிறது. அடுத்த மாதம் மொட்டுவிடும், பிறகு காய், பிறகு பழமாகக்கூட இருக்கலாம்'' என்றெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்தவர்களாகப் பேசினார்கள். லிங்கின் ஏமாற்றம் பன்மடங்கு கூடியது.

மாதங்கள் கழிந்தன. அவனது மண்



விதை!

நாடோடிக் கதை

- வி. ஜெயலக்ஷ்மி

தொட்டியில் சுத்தமாக எதுவுமே முளைக்கவில்லை. இப்படியே வருடம் ஒன்றாகிவிட்டது. மன்னன் மீண்டும் அனைவரையும் அவரவர் மண் தொட்டிகளுடன் ஆஜராகும்படி உத்தர



விட்டான்.

'அடுத்த மன்னன் நான்தான். ஏனென்றால் எனது தொட்டியில்தான் செடி கொப்பும் கிளையுமாகச் செழித்து இருக்கிறது. என எண்ணியபடி லிங்கின் நண்பர்கள் ஆரவாரத்துடன் அரண்மனையை நோக்கி தொட்டியுடன் சென்றனர்.

லிங் வீட்டைவிட்டு வெளியேகூட வரவில்லை. அவன் தாய்தான் வற்புறுத்தி மண் தொட்டியை எடுத்துக் கொண்டு செல்லச் சொன்னாள். அவனும் அரண்மனைக்கு தயக்கத்தோடு சென்றான். எல்லாரும் தத்தமது தொட்டியைப் பெருமையாக முன்னே வைத்து நின்றனர். மைதானமே ஆவலுடன் காத்திருந்தது.

ஒவ்வொரு தொட்டியாக பார்த்துக்கொண்டே வந்தான் அரசன். அப்போது லிங்கின் தொட்டியில் ஒன்றுமே இல்லை என்பதைக் கவனித்து அவனை முன்னே வரச் சொன்னான். கூனிக்குறுகி வந்தான் லிங். பிறரின் கேலிச் சிரிப்பு எங்கும் பரவியது.

''உன் பெயர் என்ன?''

''லிங் அரசே.''

''அடுத்த அரசனாக

உன்னைத் தேர்ந்தெடுக்கிறேன் விங். வாழ்த்துக்கள்'' என்றான் மன்னன்.

இதைக் கேட்டு எல்லோரும் அதிர்ந்து நின்றார்கள்.

மன்னர் தொடர்ந்தார்.

''சென்ற ஆண்டு உங்களிடம் நான் கொடுத்த விதைகள் வேகவைத்தவை; அவை முளைவிடாது. தானே மன்னனாக பேராசையில், நீங்களெல்லாம் வேறு ஒரு விதையைப் போட்டு முளைக்க வைத்து கொண்டு வந்துள்ளீர்கள்; ஆனால், நேர்மையான விங் நான் கொடுத்த விதை முளைக்காத போதும், எப்படிப் போட்டானோ அப்படியே கொண்டு வந்திருக்கிறான். இவனல்லவோ தூயவன்! உண்மையை நேசிக்கும் இவனுக்குத்தான் இந்நாட்டின் அரசனாகும் தகுதி இருக்கிறது.''



மன்னன் பேசப்பேச கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்த விங்கின் தாய், மகிழ்ச்சியின் எல்லைக்கே போய்விட்டாள். விங்கின் கண்களும் அன்னையைத் தேடின, ஆனந்தக் கண்ணீர் விட்டபடி. ●


நூலகம்


சிறுவர் சிறுமியருக்கு இஸ்லாமியக் கதைகள். ஆசிரியர் : சிராஜுல் ஹஸன். வெளியீடு: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், 138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012. விலை ரூ.40/-


நல்ல குழந்தைகளை உருவாக்குகிறோம் என்றால், நல்ல மனிதர்களை நல்ல சமுதாயத்தை உருவாக்குகிறோம் என்றுதான் பொருள். அந்த வகையில் குழந்தைகளின் மனத்திலும் செயல்களிலும் நல்ல தன்மைகளை ஏற்படுத்தக் கூடிய - அறிவுரைகளை, கதையாக வடித்திருக்கிறார் ஆசிரியர். நபி பெருமானின் கருணை, கலிபா அப்துல்லாவின் எளிமை, கலிபா உமரின் பரிவு, சல்மான் பாரசியின் பணிவு... என்று சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் எல்லாருக்கும் உரிய, ஏற்கத் தகுந்த கருத்துக்கள். இந்த நல்ல கருத்துக்களுக்காகவே வாங்க வேண்டிய புத்தகம் இது.











✱ காரில் நம்பர் பிளேட் பயன்படுத்திய முதல் நாடு	26
✱ பஞ்சு இல்லாமல் நூல் நூற்பவன்	34
✱ இங்கிலாந்தின் தேசியப் பறவை	38
✱ 'மைகாலஜி'ன்னா என்ன?	42
✱ புலிகிட்ட மாட்டின வேலுவை காப்பாத்தினது	48
✱ 'கின்னஸ்'ல இடம்பெற்ற தங்கமீன்	52

உள்ளே...









நாதஸ்வர மரம்!

✱ மனிதனின் கைவிரல் அடையாளம் போன்று, மனிதக் குரங்குக்கும் இருக்கும்.

✱ இந்தியாவின் மிகப் பெரிய மான் சாம்பர் மான்.

✱ கங்காரு ஒரே குதிப்பில் 30 அடிகள் தூரம் செல்லும்.

✱ முட்டைகளைப் பாதத்திற்கடியில் அடைகாக்கும் பறவை எம்பரர் பென்குயின்.

✱ அதியமான் ஆண்ட தகடூர் பிரதேசம் இன்றைய தருமபுரி.

✱ இலக்கியத்திற்காக அதிகம் பரிசு பெற்ற நாடு ஃபிரான்ஸ்.

✱ நோய்களைக் குணமாக்கும் நிறம், நீலநிறம்.

✱ ஆச்சா மரத்திலிருந்து நாதஸ்வரம் தயாரிக்கப்படுகிறது.

✱ இந்தியாவின் முதல் பன்னாட்டு விமான நிறுவனம் டாட்டா ஏர்லைன்ஸ் (1936).

தொகுப்பு :

புதுவை கிருஷ்ணன்

பொது அறிவு





✱ ஒவ்வொரு நாளும் அதற்கு அடுத்து வரும் நாளை விட 0.00000002 வினாடி சிறியதானது.

✱ 1867ஆம் ஆண்டில் ரஷ்யா அலாஸ்காவை அமெரிக்காவிடம் 4 மில்லியன் டாலருக்காக விற்று விட்டது.

✱ உலகிலேயே மிக அதிகமாக உபயோகப்படும் காய் - வெங்காயம்.

✱ வெள்ளரிக்காயின் உள்பகுதி வெளிப்புற காற்றை விட 20 டிகிரி சூடானது.

✱ உலகிலேயே மிகக் குறைவான ஆழம் கொண்ட கடல் 'சி ஆஃப் அஸோவ்.

- எச்.ஜெயச்சந்திரன்,
உ. எண் 381, ரயன் இன்டர்நேஷனல் ஸ்கூல், சூரத்



அலாஸ்கா $ 4 மில்லியன்

✱ 1674ஆம் ஆண்டு புதுச்சேரியை வடிவமைத்தவர்கள் பிரெஞ்சுக்காரர்கள்.

✱ ரோமன் எண்ணில் 'சி' என்பது 100 என்ற எண்ணைக் குறிக்கும்.

✱ காகிதத்தில் கரன்சி நோட்டுகள் அச்சடிக்கும் பழக்கம் சீனாவில் ஏற்பட்டது.

✱ 1932ஆம் ஆண்டு வெனிஸ் நகரத்தில் பன்னாட்டுத் திரைப் படவிழா நடைபெற்றது.

✱ 1756ஆம் ஆண்டு ஜெர்மனியில் பெர்லின் நகரில் முதல் சாக்லெட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.


✱ 1790ஆம் ஆண்டு, தையல் எந்திரத்தை லண்டனைச் சேர்ந்த தாமஸ் செயின் என்பவர் கண்டுபிடித்தார்.

✱ பிரான்ஸ் நாடுதான் கார்களில் நம்பர் பிளேட்டுகளை அறிமுகப்படுத்தியது.

- பா.முகுந்தன், சென்னை

முதல் நம்பர் பிளேட்!






காட்டிலே கோலப் போட்டி

கதை : டி. ஜானகி   படம் : ராம்கி




முயல் முத்து கோபமாயிருந்தான்.
அம்மா, எல்லாம் அந்த நரி செய்த சூழ்ச்சி!
உன்னாலதான் தோத்தேன்னு போன தடவையே சொன்னான்!
இருக்கலாம். ஆனா நாம என்ன பண்ண முடியும்?
சரி; விடு. அடுத்த முறை பார்க்கலாம்.
தாய் ஆறுதல் சொன்னது.
அதே சமயம், நரி...
கோலப் போட்டியில் எல்லா விலங்குகளும் கலந்து கொண்டன.
யப்பா... எனக்குத்தான் வெற்றி! தங்கக் காசு வேற! ஜாலிதான்!
மற்ற விலங்குகள் பேசின.
பாவம். முத்துவால பணம் கட்ட முடியல. அதான் அவன் கலந்துக்கலை.
வெற்றி பெற்றவர்களை தேர்வு செய்தது சிங்க இளவரசனும், கரடியும்!
இறுதியில் சிங்க இளவரசன்...
பலே பலே
அடடா... பிரமாதம்!
சபாஷ், நரி நாகுவின் கோலம்தான் பெஸ்ட்!


இந்தா நாகு, முதல் பரிசான தங்கக் காசை வாங்கிக்கோ!
கலந்து கொண்ட அனைவருக்கும் வெள்ளிக்காசு!
விலங்குகள் பெற்றுக் கொண்டன
நரியிடம் மற்ற விலங்குகள்...
நாகு, அந்த தங்கக் காசை காட்டேன்.
நரி கர்வமாய்...
நோ... நோ... இதெல்லாம் நீங்க பார்க்கக் கூடாது.
மற்ற விலங்குகள் பேசின.
முயல் முத்து வந்திருந்தா, இவன் ஜெயிச்சிருப்பானா? இப்படிப் பேசத்தான் முடியுமா?
அப்போது, கரடியிடம் சிங்கம்...
வாருங்கள்... வனதேவதையை வணங்கிவிட்டுக் கிளம்பலாம்!
சரி; அப்படியே செய்வோம்!
வனதேவதை கோயில் வாசலில்...
ஆ... எவ்வளவு அழகு இந்த பூக்கோலம்?
சூப்பர்! யார் போட்டது?
அருகிலிருந்த யானையிடம் கேட்டது.




முத்துவைத் தூக்கியபடியே...
இவன்தான் இந்தக் கோலத்தைப் போட்டவன்!
பிரமாதம் முத்து! பிரமாதம்!
நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்தே போட்டேன்.
ஓ... சரி; நீ ஏன் போட்டியில் கலந்து கொள்ள வில்லை?
அதற்கு என்னிடம் பணமில்லை.
அதனால் பரவாயில்லை. போட்டிக்கு என்று வரை வதைவிட....
இந்தக் கோவிலில் வரைந்ததுதான் மிகவும் பொருத்தம்!
ஆம்; அந்தக் கோலங்களைவிட இது அழகு!
உண்மை! உண்மை!!
அதனால் முத்து வுக்கு பத்து தங்கக் காசுகளை பரிசாகத் தருகிறேன்.
சபாஷ் முத்து!!
நரி தனிமையில்...
ஒரு தங்கக் காசு கிடைக்கக் கூடாதுன்னு நினைச் சேன். ஆனா, பத்து கிடைச் சிடுச்சு!
கரடி முயலிடம்...
திறமையை திரைபோட்டு மறைக்க முடியாது. குட்லக் முத்து



I

இங்கே சில பிரபல தலைவர்களைக் குறிக்கும் அடைமொழிகள் தரப்பட்டுள்ளன. அதைக் கொண்டு தலைவர்கள் யார் என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

கண்டுபிடியுங்கள்!



இடமிருந்து வலம்

1. மகாத்மா (7)
3. மனிதருள் மாணிக்கம் (2)
4. இந்தியாவின் இரும்பு மனிதர் (3)
9. கப்பலோட்டிய தமிழன் (7)
10. லோகமான்ய (4)
11. பஞ்சாப் சிங்கம் (8)

வலமிருந்து இடம்


5. சட்டமேதை (6)
7. பாவேந்தர் (6)

மேலிருந்து கீழ்

1. கர்மவீரர் (5)
2. நேதாஜி (9)

கீழிருந்து மேல்

6. அறிஞர் (3)
8. தேசியகவி (5)



பி.கே.ஷ்யாமி,
உறுப்பினர் எண் : 7,
ஏழாம் வகுப்பு, ஸ்ரீமாதா
மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்
பள்ளி, கும்பகோணம்.

II 1. சுதன், சிவாவுக்கு மேற்கே நிற்கிறான். ஆனால், குமரனோ சுதனுக்கு வடக்கே நிற்கின்றான். அப்படியானால், சிவாவிற்கு குமரன் எந்தத் திசையில் இருக்கிறான்?


2. கண்ணன், ஓரிடத்திலிருந்து மூன்று மைல்கள் வடக்கு நோக்கிச் செல்கிறான். அதன்பின், மேற்கே திரும்பி ஐந்து மைல்கள் பயணம் செய்கிறான். பின்னர், தெற்கே திரும்பி மூன்று மைல்கள் பயணிக்கிறான். அப்படியானால், இப்போது கண்ணன் புறப்பட்ட இடத்திலிருந்து, எத்தனை மைல் தூரத்தில் இருக்கிறான்.



- பா. தர்ஷிணி, உறுப்பினர் எண் : 568
பன்னிரண்டாம் வகுப்பு,
சி.சி.எம். மேல்நிலைப்பள்ளி,
இடையன்குடி

III உங்களுக்கு எவ்வளவு சொற்கள் தெரியும் என்பதை சோதிக்கும் புதிர் இது. எங்கே, இங்குள்ள சொற்கள் அனைத்தும் 'வி' என்ற எழுத்தில்தான் முடிவடைகின்றன. குறிப்புகளைக் கவனித்துச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.


1. பூமி
2. காடு
3. மகள்
4. தெனாலிராமன்
5. கீர்த்தனைகளில் , சரணத்துக்கு முந்தையது
6. இனிய செய்யுள்
7. குற்றாலத்தில் ஓர் அருவி
8. குதிரை
9. காது



- என்.நர்மதா,
ஆறாம் வகுப்பு,
க்ளூனி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பாண்டிச்சேரி

விடை : 56ம் பக்கம்

அபாரம் அஜிதாபாரதி!



கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. அகாடமி மேல்நிலைப்பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவி அ.வி.அஜிதாபாரதி. இவர் பள்ளி மாணவ மாணவியர்க்கான சுதந்திர தின கலை இலக்கியப் போட்டிகளில், கட்டுரைப் போட்டியில் பங்கேற்று 'இலக்கியச் சிற்பி' என்ற விருதைப் பெற்றுள்ளார். கோகுலம் நடத்திய அழ. வள்ளியப்பா நினைவு சிறு கதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற 'மயிலிறகு' சிறுகதையை எழுதியதும் இந்த மாணவிதான். அஜிதா பாரதி மேலும் பல விருதுகளைப் பெற வாழ்த்துவோம்!



சூப்பர் நிவேதிதா!

புதுச்சேரி அருள் சாசுதாலயா மேல் நிலைப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவி சி.நிவேதிதா. இவர், 'எல்லோரா ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸ்' மற்றும் 'அன்னை இந்திரா கிராம முன்னேற்ற இளைஞர் நற்பணி மன்றம்' இணைந்து நடத்திய, குழந்தைகள் தின ஓவியப் போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெற்றுள்ளார். நிவேதிதா மேலும் பல வெற்றிகளைப் பெறப் பாராட்டுவோம்.






சாதனைத் தளிர்கள்

சபாஷ் சுந்தரலக்ஷ்மி!



மதுரை மங்கையர்க்கரசி மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவி எம். சுந்தர லக்ஷ்மி. இவர், 'மதுரை திருநகர் ரோட்டரி க்ளப்' மற்றும் 'புதிய உலகம்' அமைப்பு இணைந்து நடத்திய கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளார். சுந்தர லக்ஷ்மி மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்தி, கரவொலி எழுப்புவோம்.



ROTARY CLUB OF TIRUNAGAR MADURAI
and
PUDHIA ULAGAM
ROTARY CHILD CARE CONFERENCE - 14,15, & 16 Nov' 08, Madurai
CERTIFICATE OF MERIT
This is to certify that ....
Of Class .... of .... School is awarded .... Prize in .... Competition
held on 14, 15 & 16th November 2008.
PRESIDENT
CHAIRMAN
SECRETARY
JOHNSON
BAL ENDURA

பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனை யாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது! விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால், அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையவை வேண்டாம்!

அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.



'மிமிக்ரி'யும்

ப. ரம்யா
ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மெ.மே.பள்ளி,
நம்பியூர்.

வேலுவும் ராமனும் நண்பர்கள். இருவரும் ஒரே பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கிறார்கள். வேலு நல்ல பலசாலி. ராமனோ உடல் மெலிந்து இருப்பான். ஆனால், பல குரல்களை 'மிமிக்ரி' செய்வதி திறமைசாலி; முத்துவுக்கு நல்ல நண்பன்! ஆனாலும், ராமனின் 'மிமிக்ரி' திறமை வேலுவை பொறாமை கொள்ள வைத்தது. அதனால், நேரம் கிடைக்கும் போதெல்லாம், ராமனை கிண்டல் செய்வான்.

ஒருநாள், உணவு இடைவேளையில் நண்பர்கள் மத்தியில் 'மிமிக்ரி' செய்து கொண்டிருந்தான் ராமன். அதைப் பார்த்தபடியே வந்த வேலுவுக்கு எரிச்சல் ஏற்பட்டது.

''டேய் நோஞ்சான், மிமிக்ரி பண்ணா நீ பெரிய ஆளா? என்னைமாதிரி உடம்புல பலம் இருக்கணும். ஊதினா பறந்துடுவ நீ...''

வேலுவின் கேலி, ராமனை நோக வைத்தது. அதன் பிறகு அவன் வேலுவிடம் பேசவே இல்லை.

நாட்கள் வாரமாகி மாதங்களும் ஆயின. ராமன் வேலுவிடம் பேசவே இல்லை; மிமிக்ரியும் செய்யவும் இல்லை.

வேலுவுக்கு ராமன் பேசாதது வருத்தம்தான். ஆனால், அவன் மிமிக்ரி செய்யாததால், தான் ஜெயித்து விட்டதாக சந்தோஷப்பட்டான்.

அன்று, வகுப்பாசிரியர் சொன்னார்:

''நாளைக்கு பக்கத்துல இருக்கிற காட்டுக்கு சுற்றுலா போகப் போறோம்.''

மறுநாள் மாணவர்கள் உற்சாகமாகக் கிளம்பினார்கள்.

இலைகளின் வகை, மரங்களின் பெயர்... என்று ஆசிரியர் சொல்லிக் கொண்டே வந்தார். அப்போது, வேலு மெல்ல நழுவினான்.

சமீபத்தில் பெய்த மழையால் காடு நன்கு துளிர்த்திருந்தது. பறவைகளும் வண்டுகளும் உற்சாக ஒலியெழுப்பிக் கொண்டிருந்தன. அப்போது புதரிலிருந்து கொழுத்த முயல் ஒன்று துள்ளி ஓடியது. அதனால் ஈர்க்கப்பட்ட வேலு, தனியே காட்டினுள் புகுந்தான்.

''யாரும் தனியா எங்கயும் போகக் கூடாது. என்பின்னால வரிசையா வரணும். காட்டுக்குள்ளே புலி, ஓநாய்லாம் இருக்கும்' என்று கிளம்பும்போதே ஆசிரியர் எச்சரித்திருந்தார்.

ஆனால், முயலைப் பார்த்த வினாடியில் வேலுவுக்கு எல்லாம் மறந்துவிட்டது. முயலைத் துரத்திக் கொண்டு ஓடினான்.

திடீரென்று கேட்ட அந்த உறுமல் சத்தம், அவனை வெலவெலக்கச் செய்தது. திரும்பினான். சற்றுத் தொலைவில்... அவனை நோக்கியபடி,

கண்கள் பளிச்சிட... உறுமியது பெரிய புலி.

உயிர் காக்கும்!



என்ன செய்வது என்று புரியாமல் நடுங்கினான் வேலு. புலியோ அவனை நோக்கி நகர ஆரம்பித்துவிட்டது.

கை கால்கள் நடுங்கின; உடம்பெங்கும் உதறலெடுத்தது. மெதுவாக நடந்த புலி, திடீரென்று உறுமலோடு பாயமுற்பட்டது.

அப்போதுதான் கேட்டது அந்தச் சப்தம்!

'ட்டுமீல்...' 'டுமீல்.

யாரோ துப்பாக்கியால் சுடுகிறார்கள். புலிக்கும் அது புரிந்தது. மறுகணம் புதருக்குள் பாய்ந்து ஓடியது.

நடுக்கம் குறையாமல் திரும்பினான் வேலு.

அங்கே ராமன் நின்று கொண்டிருந்தான்.

தன்னைக் காப்பாற்றியதும், புலியை விரட்டியதும் ராமன் மிமிக்ரி செய்த துப்பாக்கி சத்தம் என்று புரிந்தது வேலுவுக்கு.

பாய்ந்து வந்து ராமனின் கைகளைப் பற்றிக்கொண்டு சொன்னான்.

''உன்னோட எந்தத் திறமையை நான் கேலி செய்தேனோ, அதுதான் இப்ப என்னைக் காப்பாத்தியிருக்கு. என்னை மன்னிச்சுடு!''


வேலு நழுவுவதை கவனித்துப் பின் தொடர்ந்து வந்த ராமன் சொன்னான்:

''நட்புக்குள்ள ஏன் இந்த வார்த்தையெல்லாம்? வா போகலாம்.''

ராமனின் கையை இறுக்கியபடி வேலு நடந்தான். அவன் மனத்தில் இருந்த எரிச்சல் மறைந்து போயிருந்தது.

குழந்தைக்குப் பலமான





I 1. பஞ்சு இல்லாமல் நூல் நூற்கும் பலே தொழிலாளி - அவன் யார்?

2. மணி அடித்தால் மலைப்பாம்பு வரும் - அது என்ன?

3. பகலில் தூங்கி இரவில் விழிப்பான் - அவன் யார்?

4. மரம் ஒன்று, கிளைகள் 12, இலைகள் 365 - அவை என்ன?

5. கரும்பு வயலில் யானைகள் மேய்ச்சல் - அது என்ன?

6. குழந்தைக்கு எந்தக் கை பலமான கை?

- கே. பாலச்சந்திரன்,
ஆலாங்கொம்பு

II 1 கவிழ்ந்து பூப்பூத்து நிமிர்ந்து காய் காய்க்கும் - அது என்ன?

2. கரையும்; உப்பு அல்ல. தண்ணீரில் குளிப்பான்; மனிதனும் அல்ல - அது என்ன?

3. கண்ணால் பார்க்கலாம். கையால் பிடிக்க முடியாது - அது என்ன?

- அ.அனுசுயா,
உறுப்பினர் எண். 110, திருப்புலிவனம்

III . 1. அனலில் பிறப்பான்; ஆகாயத்தில் பறப்பான் - அவன் யார்?

2. கல்லைச் சுமந்தவன் கறிக்கு ருசி - அவன் யார்?

3. காலை எழுப்பும் கடிகாரம்; வாயே அதற்கு ஆதாரம் - அது என்ன?

4. எல்லா இடத்திலும் இருப்பேன்; ஆனால் என்னைப் பிடிக்க முடியாது - நான் யார்?

- பி. சர்வேஸ்வரன்,
உறுப்பினர் எண்: 456,
மூன்றாம் வகுப்பு, ஜீவனா பள்ளி,
மதுரை



விடுகதைகள்





IV. 1. தண்ணீரில் மிதக்கும்; கப்பல் அல்ல. கனமாய் இருக்கும்; கல்லும் அல்ல. வெய்யிலில் உருகும்; வெண்ணெயும் அல்ல - அது என்ன?

2. உச்சி மேலே கிரீடம்; உடம்பெல்லாம் கண் - அது என்ன?

- டி. பசுபதி மணிகண்டன்,
ஏழாம் வகுப்பு,
அவ்வையார்பாளையம், ஈரோடு



V. 1.ஊசி மூக்குச் சின்னப் பிள்ளை. ஊன்றி வைத்த கன்றுப் பிள்ளை. ஓடித் தாவும் நாமப் பிள்ளை - அது என்ன?



2.கல்லாலும் மண்ணாலும் கட்டப் படாத வீடு. காற்றிலே ஆடும் வீடு. கதவில்லாத வீடு - அது என்ன?

டி. பசுபதி மணிகண்டன்,
ஏழாம் வகுப்பு,
அவ்வையார்பாளையம், ஈரோடு

விடைகள்

I. 1. சிலந்தி, 2. ரயில், 3. விண்மீன்கள், 4. வருடம், மாதம், நாட்கள், 5. பேன், 6. அழுகை

II. 1. எள் செடி, 2. சோப்பு, 3. நிழல்


III. 1. புகை, 2. புடலங்காய், 3. சேவல், 4. காற்று

IV. 1. பனிக்கட்டி, 2. அன்னாசிப்பழம்

V. 1. அணில் பிள்ளை, 2. தூக்கணாங்குருவிக்கூடு



கோகுலம் காலண்டர்



ஜனவரி

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

பிப்ரவரி

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28

மார்ச்

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

ஏப்ரல்

S	M	T	W	T	F	S
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

மே

S	M	T	W	T	F	S
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

ஜூன்

S	M	T	W	T	F	S
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

ஜூலை

S	M	T	W	T	F	S
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

ஆகஸ்ட்

S	M	T	W	T	F	S
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

செப்டம்பர்

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

அக்டோபர்

S	M	T	W	T	F	S
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31


நவம்பர்

S	M	T	W	T	F	S
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

டிசம்பர்

S	M	T	W	T	F	S
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		





பல்வேறு வகைப் படிப்புகள்

- மைகாலஜி - பூஞ்சைகளைப் பற்றிய படிப்பு
- ஹிப்பாலஜி - குதிரைகள் பற்றிய கல்வி
- சில்விகல்ச்சர் - காடு வளர்ப்பு
- ஒலேரிகல்ச்சர் - காய்கறி வளர்ப்பு
- ஆர்போரிகல்ச்சர் - மரம் வளர்ப்பு
- எபிகிராபி - கல்வெட்டு
- கேலிகிராபி - சித்திர எழுத்துகள்
- கிரிப்டோகிராபி - சங்கேத மொழி
- லெக்ஸிகோகிராபி - அகராதி எழுதும் கலை

- அதிபன் அன்புமணி,
உ எண் : 120, ஐந்தாம் வகுப்பு,
கலைமகள் கல்வி நிலையம் மெட்ரிக் பள்ளி, ஈரோடு







உறுப்பினர் பக்கம்





1033 கண்டுபிடிப்புகள்!



- முதன்முதலில் சைக்கிள் 'ஹாபி ஹார்ஸ்' என அழைக்கப்பட்டது.
- வியாழனின் துணைக் கோளான 'இயோ'வில் எரிமலைகள் உள்ளன.
- வயலின் இசைக்கருவி இந்தியாவில் தோன்றியது.
- தேக்கு மரத்தை கரையான் அரிப்பதில்லை.
- போக்குவரத்துக் காவலர்களே இல்லாத நாடு நியூசிலாந்து
- தாமஸ் ஆல்வா எடிசன் 61 வயதிற்குள் 1033 கண்டுபிடிப்புகளுக்கு உரிமை பெற்றார்.

- அ.சார்லஸ்,
உறுப்பினர் எண் : 165,
எஸ்.ஆர்.எஃப். வித்யாலயா
மெட்ரிக்குலேசன், சென்னை

உலகில் மிகப் பெரியவை

- மிகப் பெரிய பாலைவனம் - சகாரா
- மிகப் பெரிய தீவு - கிரீன்லாந்து
- மிகப் பெரிய நன்னீர் ஏரி - சுப்பீரியர் ஏரி
- மிகப் பெரிய கோள் - வியாழன்
- மிகப் பெரிய ஆறு - நைல்
- மிகப் பெரிய கடல் - பசிபிக் பெருங்கடல்
- மிகப் பெரிய நாடு - கனடா
- மிகப் பெரிய கண்டம் - ஆசியா
- மிகப் பெரிய சுவர் - சீனப்பெருஞ்சுவர்

- ம.சுந்தர லெட்சுமி,
உறுப்பினர் எண் : 404,
மதுரை



நன்னீர் ஏரி!



ஆரிசன்

கார் முகிலில் வரைந்திடு!






கூட்ட வெளி தன்னிலே
பாட்டுப் பாடி வந்திடு!
வேட்கையோடு இருந்துமே
பூங்குயிலாய்ப் பாடிடு!

கனவு கண்ட காட்சியை
நனவுத் தேரில் ஏற்றிடு!
மனதில் அதை ஏற்றியே
தேர் வடத்தை இழுத்திடு!

இசைக் குயிலாய்ப் பறந்திடு.
இனிய உலகைக் காட்டிடு!
விசை மிகுந்த பந்துபோல்
உலகில் என்றும் உலவிடு!

வண்டு போல பாடியே
வானத்திலே பறந்திடு!
கண்டு கொண்ட காட்சியை
கார் முகிலில் வரைந்திடு!


அஞ்ஞானத்தை அகற்றிடு
விஞ்ஞானத்தை வளர்த்திடு.
தன்மானத்தைக் காத்திடு
தலை நிமிர்ந்து வாழ்ந்திடு!



நிறங்கள்

- மணிமொழி

காகம் நிறமோ கருப்பு - பெய்யும்
மேகம் நிறமும் கருப்பு
தாகம் தீர்க்கும் மோரும் - பாப்பா!
தயிரும் பாலும் வெள்ளை.



கோயில் யானை!


- கவிஞர் அழகுதாசன்

கோயில் யானை வருகுது
கொண்டாட்டமாய் வருகுது!
மேள தாளம் முழங்கிட
மெல்ல மெல்ல வருகுது!

தூணைப் போன்ற கால்களை
தூக்கி வைத்து வருகுது!
ஆனை நடக்கும் அழகினை
அருகில் வந்து பாருங்கள்!

செவியிரண்டும் முறங்களாம்
சிறிய கண்கள் வைரமாம்!
சாதுபோலச் சாமியைச்
சுமந்து வரும் யானையே!

கோயில் யானை வருகுது!
கோலாகலம் பெருகுது!
தோழா வாடா பார்க்கலாம்
தொட்டு வணங்கிப் போகலாம்!



கடலும் வானும் நீலம் - மாலைக்
கதிரின் ஒளியோ மஞ்சள்!
உடலுள் ரத்தம் சிவப்பு - பாப்பா
ஒவ்வொரு இலையும் பச்சை!

மனிதர் நிறமும் பலவாம் - அவை
மாநிறம் கருப்புடன் வெள்ளை!
மனதின் நிறமே உண்மை - அதை நீ
மனதில் கொள்ள நன்மை!





தேசியப்

இந்தியாவின் தேசியப் பறவை மயில். இது நமக்குத் தெரியும். இதுபோல, வேறு சில நாடுகளின் தேசியப் பறவைகளின் பட்டியல் வருமாறு:

ராபின் - இங்கிலாந்து நாட்டின் தேசியப் பறவை; கழுகு - அமெரிக்க நாட்டின் தேசியப் பறவை; காட்டுக்கோழி - இலங்கையின் தேசியப் பறவை; சுவாலோ - ஆஸ்திரேலியாவின் தேசியப் பறவை; வாத்து - கனடா நாட்டின் தேசியப் பறவை; வானம்பாடி - டென்மார்க் நாட்டின் தேசியப் பறவை; வெள்ளைக் கொக்கு - பர்மாவின் தேசியப் பறவையாகும்.

- பா.முகுந்தன், ஐந்தாம் வகுப்பு, கரோடியா இந்து வித்யாலயா, சென்னை


தெரியுமா?
பறவைகள்!

மு.ராம்குமார்,
ஆறாம் வகுப்பு,
ஸ்ரீ கண்ணா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
சிந்தாமணி,
புளியங்குடி,
நெல்லை





வைஷ்ணவி ராஜேஷ்,
உறுப்பினர் எண் : 625,
நான்காம் வகுப்பு,
அமிர்தா வித்யாலயம்,
மஹிந்திரா ஹில்ஸ்,
ஈஸ்ட் மாரட்பள்ளி,
செகந்திராபாத்

மா.கோவர்த்தினி, எட்டாம் வகுப்பு,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
கும்மிடிப்பூண்டி - 601 201





உங்கள் கைவண்ணம்!


திறமை



சு.தணிகைவேல்,
பதினோராம் வகுப்பு,
சே.சா.மு.ந. மேல்நிலைப் பள்ளி,
காஞ்சிபுரம்

பி.பர்வதவர்த்தினி,
ஏழாம் வகுப்பு, ஸ்ரீ வித்யா மந்திர்
மெட்ரிக் பள்ளி, சேலம்







கே.காயத்ரி,
டி.ஏ.வி. பள்ளி,
பி.எச்.இ.எல்.,
ராணிப்பேட்டை
வேலூர்

மூளைக்கு வேலை

இரண்டு படங்களுக்கிடையே உள்ள
ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





வித்தியாசங்களைக் கண்டுபிடி!

டியர் குட்டீஸ்...

அறிவிப்பு

ஐயா,

வணக்கம்.

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ளேன். என்னுடைய புகைப்படம் எண்.... அது அக்டோபர், 2007 பதிப்பில் வந்துள்ளது.

ஆனால் இன்று வரை எனக்கு உறுப்பினர் அட்டை வந்து சேரவில்லை.

ஆதலால் தயவு செய்து எனக்கு உறுப்பினர் அட்டை அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.





டியர் குட்டீஸ்...

'உறுப்பினர் சங்க அடையாள அட்டை எங்களுக்கு வரவில்லை' என்று பலர் கடிதம் எழுதி இருக்கிறீர்கள். அதேசமயம், நீங்கள் அளித்திருந்த முகவரிக்கு அனுப்பப்பட்ட பல அடையாள அட்டைகள் எங்களுக்குத் திரும்பியிருக்கின்றன.

* இதுவரை உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், கீழே கொடுக்கப் பட்டுள்ள முகவரிக்கு கடிதத்தை அனுப்புங்கள்!
* உறுப்பினர் எண் 350க்கு மேல் உள்ளவர்களுக்கு இப்போதுதான் அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே, அவர்கள் அனுப்ப வேண்டாம்.
* உறுப்பினர் சங்கத்தில் சேர, கோகுலத்தில் இடம்பெறும் கூப்பனை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். ஜெராக்ஸ் பிரதிகள் ஏற்கப்பட மாட்டாது.
* நீங்கள் எழுதும் முகவரிக்குத்தான் உறுப்பினர் அடையாள அட்டை அனுப்பப் படுகிறது. அதனால், உறுப்பினர் சங்கக் கூப்பனில், முகவரியை வீட்டு எண், தெரு, ஊர், மாவட்டம் என்று தெளிவாக எழுதி அனுப்புங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி :

சிறுவர் சங்க கூப்பன் (பிப்ரவரி 2008) கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032



பைனாகுலர்

ஒரு பைனாகுலரில் 8 X 30 என்ற குறியீடு காணப்பட்டால், பைனாகுலரின் லென்ஸ் அளவு 30 மில்லி மீட்டர் என்றும், அந்த பைனாகுலரில் உருவத்தை எட்டு மடங்கு பெரிதாக்கிப் பார்க்க முடியும் என்றும் பொருள்.

'தி மார்னிங் சாங் ஆஃப் இண்டியா!'

'ஜன கண மன' பாடலை 1919இல் ரவீந்திரநாத் தாகூர் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்தார். அப்போது அதற்கு வைக்கப்பட்ட ஆங்கிலப் பெயர் 'தி மார்னிங் சாங் ஆஃப் இண்டியா'.

டியூராலுமினியம்



டியூராலுமினியம்

அலுமினியமும், செம்பும் சேர்ந்த கலப்பு உலோகம்தான் 'டியூராலுமினியம்'. இந்த டியூராலுமினியத்தை விமானத்தின் உடல் பகுதியைச் செய்வதற்குப் பயன்படுத்துகிறார்கள்!



காற்று அல்ல, வாயு!

விமானங்களில் உள்ள டயர்களில் பஸ், லாரி டயர்களுக்கு நிரப்புவது போல காற்றை நிரப்புவது இல்லை. விமான டயர்களில் நைட்ரஜன் வாயு அடைக்கப்படுகிறது.


– ஏ.எஸ்.யோகானந்தம்,
கோபி



விண்வெளி வைரம்!

- பாலைவனக்கப்பல் என்று சொல்லப்படுவது ஒட்டகம்
- பாய்கால் என்பது ஆழமான ஏரி
- வாசனைப் பொருட்களின் இராணி எனப் பெயர்பெற்றது ஏலக்காய்
- விண்வெளியில் வைரம் தயாரித்த முதல் நாடு ஜப்பான்

எம்.வைஷ்ணவி,
உறுப்பினர்
எண் : 315,
வெள்ளமடம்



உச்சேரியோ பேங்கிராப்டி



இது ஜப்பானியப் பெயரல்ல. யானைக்கால் நோயைப் பரப்பும் கிருமியின் பெயர்!

கு. அருணாசலம்,
தென்காசி.







கண்டுபிடிப்புகள்

கைத்துப்பாக்கி - காட்

பளாஸ்க் - ஜேம்ஸ் பீவார்

டயர் - டன்லப்

சிமெண்ட் - ஜோசப் ஏஸ்பட்டின்

தந்தி - சாமுவேல் மோர்ஸ்

டைனமோ - மைக்கேல் பாரடே

பவுண்டன்பேனா - வாட்டர்மேன்

மின்சாரம் - ஓல்டா

கேமரா - ராபர்ட் போலே



தங்க மீன் 'புருஸ்'

✱ உலகிலேயே மிகவும் நீளமான தங்க மீன், அதாவது கோல்டு ஃபிஷ், சீனா நாட்டிலுள்ள ஷாங்காய் அருங் காட்சியகத்தில் உள்ளது. உலகப் புகழ் பெற்ற குங்ஃபூ வீரரான புருஸ்லீ நினை வாக 'புருஸ்' என்று பெயரிடப்பட்ட அந்த மீன், 43.5 செ.மீ. நீளம் உடையது. இதன் பெயர் கின்னஸ் புத்த கத்தில் இடம் பெற்றுள்ளது.

✱ இன்று சர்வசாதா ரணமாக விற்கும் உருளைக் கிழங்கு நூறு ஆண்டுகளுக்கு முன் ஆடம்பர உணவாக இருந்தது. தென் அமெரிக்கர்கள் முதன் முதலாக உருளைக் கிழங்கைப் பயி ரிட்டனர். பதினேழாம் நூற்றாண்டின் இறுதி வரை, மிகப் பெரிய செல்வந்தர் மட்டுமே சாப் பிடும் உணவாக இருந்தது. தொழிற் புரட்சியின் காரணமாக உருளைக் கிழங்கு அதிகம் உற்பத்தியானது. அதனால் மலி வான உணவாக அது மாறியது. உருளைக் கிழங்கில் புரதச் சத் தும், மாவுச் சத்தும் அதிகம்.



- ஆ.பிரேம்குமார்,
உறுப்பினர் எண் : 422,
காப்புக்காடு



வண்ணம் தீட்டுங்கள்

இங்குள்ள படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்கள்!

விடைகள் பக்கம்



சரியான்னு பாருங்க!

I. குறுக்கெழுத்துப் போட்டி

1 கா	ந்	தி	ய	டி	க	ள்	2 க
ம			3 நே	ரு			பா
ரா	4 ப	டே	ல்		ணா	ர்	ஷ்
ஜ					ண்	யா	ச
5 ர்	க	த்	பே	ம்	6 அ	தி	ந்
						ர	தி
	7 ன்	ச	தா	தி	ர	8 பா	ர
9 சி	த	ம்	ப	ர	னா	ர்	போ
		10 தி	ல	க	ர்		ஸ்
11 லா	லா	ல	ஜ	ப	தி	ரா	ய்

II. 1. வடமேற்கு 2. விடை ஐந்து மைல்கள்.

III. 1. புவி, 2. அடவி, 3. புதல்வி, 4. விகடகவி, 5. அனுபல்லவி, 6. மதுரகவி, 7. தேனருவி, 8. புரவி, 9. செவி

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

1.தலை ரிப்பன் நிறம், 2.விளக்கின் தலைப்பகுதி, 3.காரின் லோகோ நிறம், 4.அச்சாணி, 5.சுவரில் கல்

அன்பு நண்பர்களே...

'கோகுலம் எக்ஸ்பிரஸ்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
(எக்ஸ்பிரஸ் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

கோகுலம்
சிறுவர் சங்கம்
உறுப்பினர்களுக்கான போட்டி

டியர் குட்டீஸ்...

சிறுவர் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எனவே, பொதுவான போட்டிகளைத் தவிர, உறுப்பினர்களுக்காக மட்டுமே ஒரு போட்டியை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

* நீங்கள் உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுவிட்டீர்களா?
* அந்தப் பட்டியலில் உள்ள எண்தான், உங்கள் உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை வந்து சேரவில்லை என்றாலும், போட்டியில் கலந்து கொள்ளலாம்.
* இதுவரை உறுப்பினர் ஆகாதவர்கள் உடனே உறுப்பினராகிக் கொள்ளுங்கள்.

போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளை வெல்லுங்கள்.

என்ன போட்டி? கதை? கவிதை? கட்டுரை?

ஓவியம்? துணுக்கு?

என்ன பரிசு?

விவரங்கள்...

அடுத்த இதழில்!



“ஸ்கூலுக்குப் போகமாட்டேன்னு சொல்றியாமே, ஏன்? பிடிக்கலையா?” ஒரு மாணவனிடம் கேட்டேன். அந்த மாணவன் சொன்னான் : “ஸார், எனக்கு ஸ்கூலுக்குப் போகப் பிடிச்சிருக்கு. ஆனா, அங்க கேள்வி கேக்கறதுதான் பிடிக்கலை.”

கேள்விகள்தான் இன்று நாம் பயன்படுத்தும் செல்ஃபோன் வரையான எல்லாக் கண்டுபிடிப்புகளுக்கும் ஆதாரம்!

இரண்டு வயதிலேயே கேள்வி தோன்றிவிடுகிறது. 'அது என்ன' என்றுகேட்டு, ஃபேன், மரம், நாய், டி.வி. என்று ஒவ்வொன்றாகத் தெரிந்துகொள்ள ஆரம்பிக்கிறது குழந்தை.

கேள்வியின் இன்னொரு வடிவம்தான் அறிவியல்!

கேள்விகள் மட்டும் இல்லாவிட்டால், உலகம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தேங்கி நின்றிருக்கும். ஒரு சின்னக் குண்டூசியில் தொடங்கி, வானில் பறக்கும் விமானங்கள், ராக்கெட்கள் வரை சகலமும், விஞ்ஞானிகளின் கேள்வி விதைகளில் தொடங்கியவைதான்.

இப்படித்தான், கலீலியோவுக்கு ஒரு கேள்வி.

எந்த கலீலியோ?

பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் அறிவியல் அறிஞர் கலீலியோ. இயற்பியல், கணக்கு, வானவியல் எனப் பல துறைகளில் ஏகப்பட்ட கருத்துகளைச் சொல்லி, கண்டுபிடிப்பு





அறிவியல் கதை

- என். சொக்கன்

குண்டுகள்!

களைச் செய்து அறிவியல் புரட்சி ஏற்படுத்திய மேதை.

கலீலியோவுக்கு முன்பே, ஏகப்பட்ட விஞ்ஞானிகள் பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார்கள்; புதுப்புது விஷயங்களைக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் சொன்னதையெல்லாம், கலீலியோ அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. 'இது சரிதானா?' என்று அவரே ஆராய்ந்து பார்த்து, அதன்பிறகுதான் ஒப்புக்கொண்டார். சரியில்லை என்று தோன்றினால், தைரியமாக அதை எதிர்த்துக் கேள்வி கேட்டார்.

இப்படித்தான், அவர் அரிஸ்டாட்டிலின் கருத்து ஒன்றை மறுத்துக் கேள்வி எழுப்பினார்.

அரிஸ்டாட்டில் என்பவர், கிறிஸ்து பிறப்பதற்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பாக இந்த மண்ணில் வாழ்ந்த அறிவியல் அறிஞர்; தத்துவ ஞானி. மாவீரன் அலெக்ஸாண்டருக்குப் பாடம் சொல்லிக்கொடுத்த 'பெரிய' வாத்தியார் இவர்.

அப்பேர்ப்பட்ட அரிஸ்டாட்டிலை, அன்றைய அறிவியல் உலகம் மிகவும் மரியாதையுடன்பார்த்தது. அரிஸ்டாட்டில் இறந்து சுமார் 2000 ஆண்டுகள் கழித்தும், அவர் சொன்னவற்றை மக்கள் அப்படியே மதித்துப் பின்பற்றிக் கொண்டிருந்தார்கள்.

கலீலியோவுக்கும், அரிஸ்டாட்டில்மீது நல்ல மரியாதை உண்டு. ஆனால் அதற்காக, அரிஸ்டாட்டில் சொன்னதையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்வதற்கு அவரால் முடியவில்லை.

அப்படி என்ன பெரிதாகச் சொல்லிவிட்டார் அரிஸ்டாட்டில்?

இப்போது, உங்கள் கையில் ஒரு கல் இருக்கிறது. அதை மேலே தூக்கி எறிகிறீர்கள். என்ன ஆகும்?

நாம் மேலே எறிந்த அந்தக் கல், சில விநாடிகளுக்குப் பிறகு கீழே வந்துவிழும். அல்லது, பக்கத்தில் இருக்கிறவர் தலையில் பட்டு மண்டை உடையும்.

சரி, இப்போது, அந்தக் கல்லுக்குப் பதிலாக, கொஞ்சம் பஞ்சைச் சுருட்டி மேலே போட்டால்?

கல் கனமானது. ஆனால் பஞ்சு, லேசானது. ஆகவே, கல்லைவிட மெதுவாகத்தான் பஞ்சு தரைக்கு இறங்கிவரும்.

இதைத்தான் அரிஸ்டாட்டில் சொன்னார், 'ஒரு பொருள் கீழே விழுகிற வேகம், அதன் எடையைப் பொறுத்து மாறுகிறது என்று'

அரிஸ்டாட்டில் சொன்ன இந்தக் கருத்தை, வழக்கம்போல் அறிவியல் உலகம் அப்படியே ஏற்றுக்கொண்டுவிட்டது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும்,

அவரை யாரும் எதிர்த்துக் கேள்வி கேட்கவில்லை.

ஆனால், கலீலியோவுக்கு மட்டும் அரிஸ்டாட்டிலின் கூற்று தவறு எனத் தோன்றியது.

'கல், பஞ்சு என எதைத் தூக்கி மேலே எறிந்தாலும், அதன்மூலம் புவி ஈர்ப்பு விசை மாறப்போவதில்லை. ஆகவே, அவை இரண்டும் ஒரே நேரத்தில்தான் கீழே விழவேண்டும்' என்றார் கலீலியோ.

இப்படி அவர் சொன்னதும், மக்கள் கொதித்துப் போய்விட்டார்கள்.

ஆனால், கலீலியோ தனது எண்ணத்திலிருந்து கொஞ்சமும் பின்வாங்கவில்லை. அரிஸ்டாட்டில் சொன்னது சரியா, தவறா என்று பரிசோதித்துப் பார்க்கக் கிளம்பி விட்டார்.

அப்போது அவர் பைசா நகரத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார். அங்குதான் உலகப் புகழ் பெற்ற 'சாய்ந்த கோபுரம்' இருக்கிறது.


ஒருநாள், பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்தின்மீது கலீலியோ ஏறி நின்றார். அவர் கையில் இரண்டு குண்டுகள்.

அந்த இரண்டு குண்டுகளும், பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருந்தன. ஆனால் அவற்றில் ஒன்று, கனமான இரும்புக் குண்டு, இன்னொன்று, மரத்தால் செய்யப்பட்ட குண்டு.

உங்களுக்கே தெரியும், இரும்பைவிட, மரம் லேசானது. ஆகவே, அரிஸ்டாட்டில் சொன்னது உண்மை என்றால், மரக் குண்டுக்கு முன்னால் இரும்புக் குண்(தரையில் வந்து விழவேண்டும்.

அதைச் சோதித்துப் பார்க்க விரு(பித்தான் கோபுரத்தின்மீது ஏறியிருந்தார்

அதை நேரில் பார்ப்பதற்காகக் கூட்ட(கூட்டமாக மக்கள் வந்தார்கள். அவர்க(எல்லோருக்கும் பயங்கர டென்ஷ(ஜெயிக்கப் போவது கலீ(யோவா? அரிஸ்டாட்டிலா?



இரண்டு குண்டுகளையும் ஒரே நேரத்தில் கீழே போட்டார். சில வினாடிகள் கழித்து 'தொம்' என்று ஒரு சத்தம் கேட்டது.

கோபுரத்தின் உச்சியி(நின்ற கலீலியோ, அங்கிருந்(ஒரே நேரத்தில் இரண்(குண்டுகளையும் கீழே போ(டார், அவை மளமளவென்(தரையை நோக்கிப் பாய்ந்த(

சில வினாடிகள் கழித்('தொம்' என்று ஒரு சத்தம் கே(டது. கவனியுங்கள். ஒரு ச(தம்; இரண்டு சத்தங்கள் அல்ல(

ஆக, கனமான இரும்பு(குண்டு முதலில் விழுந்(அதன்பிறகு லேசான மர(குண்டு விழவில்லை. இரண்(குண்டுகளும் ஒரே நேரத்தி(தான் தரைக்கு வந்திரு(கின்றன.

அதிர்ச்சியில் உறை(திருந்த கூட்டம், அசந்து போய்க் (தட்டியது. அரிஸ்டாட்டில் சொன்ன(தவறு, மகா தவறு என்பதைக் கண்முன்(நிரூபித்துவிட்டார் கலீலியோ!

பிறர் சொல்வதையெல்லாம் அ(படியே நம்பவேண்டிய அவசிய(இல்லை. அது சரியா, தவறா என்(கேள்வி கேட்டு, அல்லது பரிசோதன(செய்து பார்த்து உண்மைகளைப் புரிந்(கொள்ள வேண்டும். அதுதான் அறிவிய(பாதை!


நிஜாமின்
தர்பூசணி
கதை : ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ்
தமிழ் வடிவம் : ஆர்.எஸ்.ஆர்.
நிஜாமும் கபீரும் சென்று கொண்டிருந்தனர். அப்போது...
ஹே... அதோ பார் தர்பூசணி.
ஆமா! ரொம்பப் பெரிசா வளர்ந்திருக்கு.
அது அப்துல்லாவின் தோட்டம். அவன் நல்லவன். கடின உழைப்பாளி!
ஆ... தர்பூசணி நன்றாக விளைந்துள்ளது. நாளை சந்தைக்கு அனுப்பிடலாம். ம்ம்... நல்ல லாபம் வரும்.
அவனைப் பார்த்தான் நிஜாம்.
எனக்குப் பொறாமையா இருக்கு. தர்பூசணி எவ்வளவு பெரிசு பார்த்தியா?
பொறாமை பொங்கக் கத்தினான்.
நாமும் தர்பூசணி பயிர் பண்ணனும்.


அதுக்கு முன்னால, நிலத்தை நல்லா உழணும்.
தர்பூசணி நல்லா வளர, நிறைய தண்ணீர் ஊத்து வோம்.
இந்த வருஷம் அப்துல்லாவை விட, அதிக விளைச்சல் நமக்குத்தான்.
கபீர், இந்த தர்பூசணியை வித்தே நான் கோடீஸ்வரன் ஆய்டுவேன்.
உற்சாகப் பெருக்கில் பேசினான் நிஜாம்.
இந்த நாட்டையே விலைக்கு வாங்கிடுவேன்.



தர்பூசணி காய்கள் வளர ஆரம்பித்தன. ஒருநாள்...
ஏய் கபீர், இது ஏன் இப்படி இருக்கு?
கபீரும் அதிர்ச்சியாய் பார்த்தான்.
தர்ப்பூசணி எல்லாம் மெலிஞ்சு எலும்புக்கூடு மாதிரி இருக்கே.
அப்துல்லாவோட தர்பூசணி பெரிசா இருக்கு.
கோபத்தில் அலறினான்.
என்னால சகிக்க முடியலை. என்ன பண்றது?
எனக்கு ஒரு ஐடியா.
அங்கிருந்த கழுதைகளைக் காட்டி...
இதையெல்லாம் அப்துல்லாவோட தோட்டத்துக்கு விரட்டுவோம். மீதியை அதுங்க பார்த்துக்கும்.
வெரிகுட், நல்ல ஐடியா!


கபீர் கழுதைகளை விரட்டினான்.
ஹேய்... ஓடு... ஓடு...
மறு நாள்...
எங்க காயையே காணும்? யாரும் திருடிட்டாங்களா?
கபீர் பயந்தான்.
இல்லை... கழுதைங்கதான் சாப்பிட்டுச்சு.
என்ன உளர்ற?
அப்ப ஏன் அந்தக் கழுதைகளை தடுக்கலை?
அவன் தோட்டத்துக்கு நம்ம தோட்டம் வழியாத்தானே போகணும்.
அவன் பயிரை அழிக்க நினைச்சேன். நம்ம தர்பூசணியைப் பத்தி நினைக்கல.
கழுதைங்க அவன் பயிரை ஒண்ணுமே பண்ணல.
நிஜந்தான். நம்ம தர்பூசணியை சாப்பிட்டதால வயிறு நிறைஞ்சு போச்சு. அதனாலதான் அவன் தோட்டத்தை எதுவும் பண்ணலை!

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

801. எஸ்.மயில்வாகனன், எட்டாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்
802. எஸ்.ஹரிநாராயணன், எட்டாம் வகுப்பு, ஜெயேந்திரா பள்ளி, திருநெல்வேலி
803. பி.பிரவீன்குமார், ஆறாம் வகுப்பு, இலக்குவனார் நடுநிலைப் பள்ளி, வாய்மேடு.
804. பி.சக்திவேல், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப்பள்ளி, தகட்டூர்
805. கே.தனஞ்ஜயன், மூன்றாம் வகுப்பு, ஸ்ரீ கிருஷ்ணா நர்சரி & பிரைமரி பள்ளி, கோயம்புத்தூர்
806. சி.கிறிஸ்டி, நான்காம் வகுப்பு, ஸேக்ரட் ஹார்ட் மெட்ரிக் மேல்நிலைப் பளளி, சென்னை
807. ப.சங்கீதா, ஏழாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திரா மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி
808. பா.யாழினி, இரண்டாம் வகுப்பு, ஸ்ரீசௌடாம்பிகா கான்வென்ட் மெட்ரிகுலேஷன் பள்ளி, அருப்புக்கோட்டை
809. சி.பார்கவி, எட்டாம் வகுப்பு, ஜஸ்ஸி மோஸஸ் பள்ளி, சென்னை
810. ச.சூர்யபிரசாத், இரண்டாம் வகுப்பு, மலர் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி, சேலம்



811. ஜெ.தர்ஷிணி, எட்டாம் வகுப்பு, பாரதி வித்யா பவன் பள்ளி, ஈரோடு
812. பி.தங்கவேல், ஒன்பதாம் வகுப்பு, செங்குந்தர் மகாஜன மேல்நிலைப் பள்ளி, தாரமங்கலம்
813. கே.நடராஜன், ஒன்றாம் வகுப்பு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா நர்சரி & பிரைமரி பள்ளி, விருதுநகர்
814. ஆர்.சிவநாராயணன், ஐந்தாம் வகுப்பு, விவேகானந்தா பள்ளி, சென்னை
815. ப.சசிகுமார், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
816. பி.கார்த்திகா, மூன்றாம் வகுப்பு, எம்.ஆர்.பி. பள்ளி, பி.அழகாபுரி
817. ஆர்.ஸ்ரீராம், ஐந்தாம் வகுப்பு, சீதாதேவி கரோடியா மெட்ரிக். மேல்நலைப் பள்ளி, சென்னை
818. ஏ.காயத்ரி, ஆறாம் வகுப்பு, ஓ.பி.சி.எம். மேல்நிலைப் பள்ளி, மதுரை
819. மு.சாலனி, மூன்றாம் வகுப்பு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
820. எஸ்.இந்துமதி, ஆறாம் வகுப்பு, எஸ்.எஸ்.கே.வி. மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
821. வி.பவதாரிணி, ஏழாம் வகுப்பு, இந்தியன் மாடர்ன் அறிவியல் பள்ளி, அபுதாபி
822. வி.பவன்குமார், நான்காம் வகுப்பு, இந்தியன் மாடர்ன் அறிவியல் பள்ளி,

அபுதாபி


823. என்.பத்மாவதி, ஆறாம் வகுப்பு, ஃபஸ்கஸ் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, மதுரை

824. கா.ஸ்ரீஹரி, ஆறாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிகுலேஷன் ஃப்யூச்சர் பள்ளி, சென்னை

825. கா. அபிராமி, ஐந்தாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிகுலேஷன் ஃப்யூச்சர் பள்ளி, சென்னை

826. அ.தேவிஸ்ரீ, மூன்றாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிகுலேஷன் ஃப்யூச்சர் பள்ளி, சென்னை

827. ஆர்.ஸ்ரீபாலாஜி, ஆறாம் வகுப்பு, ஸ்ரீபாரதி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை



828. ஆர்.மதுமிதா, முதல் வகுப்பு, ஸ்ரீபாரதி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை

829. டி.அலமேலு ஸ்ரீ, ஐந்தாம் வகுப்பு, சன்பீம் மெட்ரிகுலேஷன் ஸ்கூல், வேலூர்

830. பி.விஸ்வநாத், ஆறாம் வகுப்பு, விவேகானந்தா வித்யா மந்திர் மெட்ரிகுலேஷன் பள்ளி, பண்ருட்டி

831. எம்.அருள்ஜெயந்த், ஐந்தாம் வகுப்பு, இந்து சீனியர் செகண்டரி பள்ளி, சென்னை - 5

832. கே. சந்தோஷ்குமார், ஆறாம் வகுப்பு, ஜீவனா பள்ளி, மதுரை

833. வெ.ராஜேஸ்வரி, ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, ராஜபாளையம்

834. ஆர்த்திஸ்ரீ, இந்தியன் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

835. இரா.காட்வின், ஐந்தாம் வகுப்பு, கா.ஆ.மழலையர் துவக்கப்பள்ளி, ஆறுமுகநேரி

836. எம்.எஸ்.வண்டார் பூங்குழலி, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி, மணலூர்பேட்டை

837. எம்.ராகுல், புனித மரியன்னை ஆங்கிலப் பள்ளி, கும்மிடிப்பூண்டி

838. எஸ்.சுதர்சனன், ஏழாம் வகுப்பு, சீதாதேவி கரோடியா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை

839. ப.ஹரிகிருஷ்ணன், நான்காம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

840. எஸ்.வர்ஷிணி, பக்தவத்சலம் வித்யாஷ்ரம், கொரட்டூர்

841. நி.க.இலக்கியா, ஆறாம் வகுப்பு, சோ.சு.க.வி. மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்

842. இரா.ப்ரீத்தி, ஆறாம் வகுப்பு, காமிதே மில்லத் மேல்நிலைப் பள்ளி, தோப்புத்துறை

843. கேரல் செரூப் அலெக்சாண்டர், நான்காம் வகுப்பு, சிருஷ்டி வித்யாஷ்ரம், வேலூர்

844. பி.மெய்நாதன், எட்டாம் வகுப்பு, நவரசம் பதின்ம மேல்நிலைப் பள்ளி,

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!



ள்ளியூத்து

45. இரா. சந்திரசேகர், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

46. எஸ்.முஹம்மது ராஜிக், எட்டாம் வகுப்பு, கலிமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பரங்கிப் பேட்டை

47. வி.எல்.ப்ரீதிகா, இரண்டாம் வகுப்பு, புனித ஸ்டெல்லா மெட்ரிகுலேஷன் பள்ளி, லக்ஷ்மிபுரம்

48. கே.கீர்த்திகா லக்ஷ்மி, ஐந்தாம் வகுப்பு, தேவி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, பழனி

49. ஆ.சங்கர மகாதேவன், பதினொராம் வகுப்பு, ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீவைகுண்டம்

50. சொ.சுவாமிநாதன், நான்காம் வகுப்பு, பெல் பள்ளி, பாளையங்கோட்டை

லாவணி

மதியம் கிளம்பும்போதே சித்தப்பா கூறியிருந்தார். ''ரஞ்சன், இப்ப கொஞ்ச நேரமாவது தூங்கு.''

ரஞ்சனுக்குக் கொஞ்சம் வியப்பாக இருந்தது. பகலில் எதற்காகத் தூங்கச் சொல்கிறார்?

அவன் விழிப்பதைப் பார்த்து சித்தப்பாவே விளக்கம் சொன்னார். ''ராத்திரி 'லாவணி'க்குப் போறோம். விடிய விடிய நடக்கும் நிகழ்ச்சி அது. அதனாலேதான் இப்பவே கொஞ்சநேரம் தூங்கச் சொல்றேன்.''

அப்போது எதிர்பாராதவிதமாக ரஞ்சனின் பாட்டி குறுக்கிட்டாள். ''லாவணிக்கு எதற்காக ரஞ்சனை அழைச்சிக்கிட்டுப்போறே?''

சித்தப்பா சிரித்தபடி கூறினார். ''ரஞ்சன் ஒண்ணும் சின்னப்பையன் இல்லே. விவரம் தெரிஞ்சிக்கிற வயசுதான். தவிர எல்லா நாட்டுப்புறக் கலைகளையும் நல்லா ரசிக்கிறான். இதையும் தெரிஞ்சிக்கட்டுமே.''

ரஞ்சனின் ஆர்வம் வளர்ந்தது. பாட்டியிடம் போய் அவள் தடுத்ததன் காரணத்தைக் கேட்டான். ''உன் சித்தப்பாகிட்டேயே கேட்டுக்க'' என்றபடி நகர்ந்துவிட்டாள் பாட்டி.

விடையை அன்று இரவு நடைபெற்ற லாவணி நிகழ்ச்சியைப் பார்த்தபோது தெரிந்துகொண்டான் ரஞ்சன்.

லாவணி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் இரண்டு அணிகளாகப் பிரிந்திருந்திருந்தனர். முதலில் ஒரு விநாயகர் பாடலை ஒரு அணியினர் பாடிவிட்டு பாதியில் நிறுத்த, மீதிப்பாட்டை எதிர் அணியைச் சேர்ந்தவர்கள் பாடி நிறைவு செய்தனர்.

எல்லோருக்குமே நல்ல குரல் வளம் இருந்தது. உச்சமாகக் குரல் கொடுத்த போதுகூட சிரமம் இல்லாமல் பாடினார்கள். ''இப்படி இருந்தால்தான் ராத்திரி முழுக்க பாட முடியும்'' என்று அதற்கு



- அருண் சரண்யா

விளக்கம் அளித்தார் சித்தப்பா.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன் ஒரு பெரியவர் மன்மதனின் கதையைச் சொன்னார்.

சிவபெருமான் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் கண் திறந்து எதிரே இருக்கும் பார்வதி தேவியைப் பார்த்தால்தான் அவர்கள் இருவருமாகச் சேர்ந்து உலகத்தைக் காக்க முடியும். இதற்காக மன்மதன் சிவபெருமான் மீது அம்புகளை எய்கிறான். அம்பு என்றால் குத்துகிற அம்பு இல்லை. பூக்களால் செய்த அம்பு. தன்மீது மன்மதனின் மலரம்புகள் பட்டவுடன் கோபமாக கண்களைத் திறக்கும் சிவபெருமான், தன் கோபப் பார்வையாலேயே மன்மதனை எரித்து விடுகிறார்.



இந்த இடத்தில் அந்தப் பெரியவர் கதையை நிறுத்தி விட, நிகழ்ச்சி தொடர்ந்தது. ஒரு அணியைச் சேர்ந்தவர்கள் "மன்மதன் ஒன்றும் எரிந்துவிடவில்லை. அவன் உலகமெங்கும் நிறைந்திருக்கிறான்" என்று பாட்டில் கூற, மற்றொரு அணியினர் இதை எதிர்த்துப் பாடினார்கள்.

ஒருவரையொருவர் செல்லமாக பாட்டிலேயே திட்டிக் கொண்டதும் சுவையாக இருந்தது. அவரவரும் தங்களுக்கு வலு சேர்க்க வெவ்வேறு புராணங்களில் இருந்து சம்பவங்களை அடுக்கினார்கள்.

பாடல்கள் எளிமையாக இருந்ததால் ரஞ்சனுக்கு அவற்றின் அர்த்தம் புரிந்தது.

நடுவில் ரஞ்சனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. "லாவணின்னு ஒருவகை டான்ஸுன்னு

* லாவணி இசை நிகழ்ச்சி பெரும்பாலும் ஏப்ரல் - மே மாதங்களில் நடக்கும். வசந்தகாலம் தொடங்குகையில் இந்த நிகழ்ச்சி அதிகளவில் நடைபெறும்.

* முக்கியமாக தஞ்சாவூர் மாவட்டத்திலும் ஓரளவு திருச்சி, மதுரை மாவடங்களிலும் லாவணி நிகழ்ச்சிகள் அதிகம் நடைபெறுவது வழக்கம்.

* முன்னொரு காலத்தில் 'காமன் பண்டிகை' என்றே தமிழர்கள் ஒருவிழா நடத்துவார்கள். அப்போது லாவணி நிகழ்ச்சிக்கு முக்கியப் பங்கு உண்டு.



* மகாராஷ்டிரத்தில் உள்ள நாட்டுப்புறக்கலையான லாவணியில் பாடல்களைப் பாடுபவர்கள் பெரும்பாலும் பெண்களாக இருப்பார்கள். ஆடுபவர்களிலும் பெண்கள் உண்டு. இந்த நடனவகையை 'தமாஷா' என்பார்கள்.

* லாவணி இசை நடனத்துக்கு 'டோலக்'தான் முக்கிய வாத்தியம். என்றாலும், அதை ஓரளவுதான் வாசிப்பார்கள். பாட்டும் நடனமும்தான் முக்கியம்.

நினைச்சிருந்தேனே. ஒரு தடவை டி.வி யிலேகூட பார்த்ததாக நினைவு'' என்ற முணுமுணுக்க, சித்தப்பா விளக்கம் அளித் தார்.

''மகாராஷ்டிராவிலும் மத்தியப் பிரதேசத்திலும் லாவணி என்ற பெயரிலே வேறு ஒரு நாட்டுப்புறக்கலை இருக்கு. லாவண்யம் என்ற வார்த் தையில் இருந்து வந்ததுதான் லாவணி. லாவண்யம் என்றால் அழகு என்று அர்த்தம். பேஷ்வா மன்னர்கள் ஆட்சி யிலேதான் லாவணி நடனம் மிகவும் புகழ்பெற்றது. பதினெட்டாம் நூற்றாண் டில் போர்ச்சிப்பாய்களை மகிழ வைப் பதற்காக லாவணி ஆடச் சொன்னார்கள். மகாராஷ்டிராவில் உள்ள சோலாபூ மாவட்டத்தில் வசித்த ஆட்டு இடையா கள்தான் முதலில் லாவணி நடனத்தை ஆடினாங்க. அவங்களாவே இட்டுக் கட்டி பாடினாங்க. நடுவிலே தாளத்துக்கு ஏற்ற வார்த்தைகள் கிடைக்காதபோது அர்த்தமில்லாத வார்த்தைகளைக் கூட பயன்படுத்தினாங்க.''

கண்ணெதிரே கட்சி கட்டிக்கொண்டு நடைபெற்ற லாவணி நிகழ்ச்சி ஒரு புறமும், சித்தப்பாவின் விளக்கங்கள் மறுபுறமுமாக இருக்க, ரஞ்சன் அன்று இரவு முழுவதும் துளிக்கூட தூங்க வில்லை. மறுநாள் காலை நாலை மணிக்குத்தான் நிகழ்ச்சி முடிந்தது.

நிகழ்ச்சி முடிந்ததற்கு அடையாள மாக அங்கு தயாராக வைக்கப்பட் டிருந்த மன்மதனின் உருவப் பொம் மையை எரித்தார்கள். பாட்டிலேயே பதில் சொன்னதும், செல்லத் திட்டலு மாக அமைந்த லாவணி, ரஞ்சனுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.


கண்ணாடி போட்ட காரணம்!

"அப்பா, பொய் பேசக் கூடாதுன்னு சொல்லிட்டு, நீங்களே பொய் பேசறீங்களே!"

"என்னடா சொல்றே?"

"நேத்து அங்கிள்கிட்ட நான் ரொம்ப நல்லா படிக்கிறதா சொன்னீங்களே, அதைத்தான் சொல்றேன்."

- மு.அருண்குமார்,
உறுப்பினர் எண் : 670, ஒசூர்



"ஆசைதான் துன்பத்துக்குக் காரணம்னு புத்தர் சொல்லியிருக்கார்."

"அதனால தான் சார் நான் அதிகமா மார்க்கு வாங்க ஆசைப்படறதில்லை."

- தனலட்சுமி,
கோவை





"அந்தக் குளம் இருக்குல்ல. அதைத் தாண்டி வந்தால் அடுத்த வீடு எங்க வீடுதான்."

"அப்ப நீச்சல் தெரிஞ்சாத்தான் உங்க வீட்டுக்கு வர முடியும்னு சொல்லு."

- அ.பேச்சியப்பன்,
ராஜபாளையம்



"எங்க சார் வகுப்புக்குள் வந்ததும் நான் கண்ணாடி போட்டுக்குவேன்."

"ஏன்?"

"தலைவலி வந்தால் கண்ணாடி போட்டுக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கிறார்!"

- எம்.அசோக்ராஜா,
திருச்சி





மேஜிக் ராணி!

-சுகுணா




கவிதை, கட்டுரை, கதை என்று எழுத்து வடிவங்களில் சிலருக்கு ஆர்வம் இருக்கும். ஓவியத்தில் சிலர் ஆர்வம் கொண்டிருப்பார்கள். இதைப் போலவே பாட்டு, நடனம், இசை என்று ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு ஈர்ப்பு இருக்கும்.

ஆனால், அனுப்ரியா ஒரு ஆச்சர்யம்!

நன்றாக நடனம் ஆடுவார். நடனப் போட்டிகளில் முதல்பரிசு பெற்றவர். ஓவியம் வரைவார். சிறந்த ஓவியக் கலைஞர் என்ற விருது பெற்றவர். நன்றாகப் படிப்பார். அதனால் கல்வியின் ஒட்டுமொத்த சாம்பயன் விருது பள்ளியில் இவரிடம்தான்.







இவை மட்டுமல்ல; இவர் நன்றாக மேஜிக் செய்வார். மாவட்ட அளவில் அல்ல; மண்டல அளவில் தேர்ச்சி பெற்று 'இளந்திரு' என்ற விருதையும் பெற்றிருக்கிறார் அனுப்ரியா.

வயது என்ன தெரியுமா?

ஒன்பது வயது. திருச்சி ஆர்.எஸ்.கே. மேல்நிலைப் பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும் மாணவிஅனுப்ரியா ஆச்சரியமான திறமைகளை கொண்டிருக்கிறாள்.



எப்படி இந்த ஆர்வம் ஏற்பட்டது? என்று கேட்டால், தாத்தா சீதாராமனைக் கைகாட்டுகிறார் அனுப்ரியா.

'பெல்' நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற சீதாராமன் தொடர்ந்தார். ''ஸ்கூல்ல நடந்த மாறுவேடப் போட்டிக்கு வித்தியாசமா இருக்கட்டுமேன்னு மேஜிக் நிபுணர் வேஷம் போட்டுவிட்டேன். உடனே எனக்கு ஏதாவது மேஜக் கத்துக் குடுங்கன்னு சொன்னா, நானும் தெரிஞ்சவரைக்கும் ரெண்டு மேஜிக் கத்துக் கொடுத்தேன். இப்படி விளையாட்டா ஆரம்பச்சதுதான் மேஜிக்''

சின்ன விஷயங்கள்தான் பெரிய ஆச்சர்யங்களின் அடிப்படை என்று சொல்வார்கள். அதை நிஜம் என்று நிருபித்துக் கொண்டிருக்கிறாள் சிறுமி அனுப்ரியா.



தான் படிக்கும் பள்ளியில் மட்டுமே மேஜிக் செய்த அனுப்ரியா இப்போது வெளியிடங்களிலும் மேஜிக் செய்கிறார். தேசிய அளவில் மேஜிக்கில் 'இளந்திரு' விருது பெற வேண்டும் என்கிற ஆசையும் இருக்கிறது.

அதேசமயம், தன்னுடைய கல்வியிலும் கவனம் சிதறாமல் இருக்கிறார் என்பதுதான் கவனிக்கத்தக்கது.


''எங்கள் மகளின் திறமை வெளிப்பட வேண்டும். அவளை பார்த்து மற்ற மாணவர்களுக்கும் 'தங்களாலும் முடியும்' என்கிற தன்னம்பக்கை ஏற்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். அதனாலேயே வெளி நிகழ்ச்சிகளை ஏற்றுக்கொள்கிறோம்'' என்கிறார்கள் அவளது பெற்றோர்.

இவ்வளவு விஷயங்களில் தன்னுடைய ஆர்வத்தை தளராமல் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அனுப்ரியாவுக்கும் இன்னொரு ஆசையும் இருக்கிறது. அதாவது ஐ.ஏ.எஸ். ஆவது!

நல்ல விஷயம்தான்; அதிலும் அனுப்ரியா வெற்றி பெறட்டும்! ●


'காரோ'வின் காணிக்கை!

கதை : ராகுல்
படம் : பின்னா





ஆழ்ந்து தூங்குகிறாள்
அப்போது -
காரோ எழுந்திரு...
காரோவின் உறக்கம் கலையவில்லை.
அவரை பலமாக உலுக்கி...
சீக்கிரம் எழுந்திரு காரோ....
உறக்கம் கலைந்து...
யார் நீ?
அப்புறம் பேசலாம் வா.
எங்கே போவது?
வேகமாய் வா, சொல்கிறேன்.
வெளியே வர...
டமால்
திரும்பினால்...
டமால்
அதிர்கிறாள் -
ஆண்டவா என்ன இது?


திரும்பிப் பார்த்தார்...
எங்கே அந்தச் சிறுமி?
குழப்பமாய்...
ஆ... அந்த முகம்... அந்தக் கண்கள்... எங்கோ பார்த்திருக்கிறேன்...
மறுநாள், கோயிலில்...
தாயே? நீயா என்னைக் காக்க வந்தாய்!
இரவில் பார்த்த சிறுமியின் முகம் அம்பிகையின் முகமாக இருந்தது.
மனங் கசிந்தார் வில்லியம் காரோ!
சில நாட்களுக்குப் பிறகு.
இதோ தந்த ஊஞ்சல் என் காணிக்கை!
ஆலயத்தில் பக்தர்கள்...
சிறுமியா வந்து காப்பாத்தினது வேதவல்லிதான்!
அதான் கட்டில் ஊஞ்சல் காணிக்கையா!



சுறுசுறுப்பு.. விறுவிறுப்பு.. கலகலப்பு..!

'கவிதைக்கு பிறந்த நாள்' என்ற தலைப்பில் மகாகவி பாரதியார் இளமைக் காலம் முதல் பணிபுரிந்தவிதம், சமூக மாற்றம் விரும்பிய அவரது கவிதை நூல்கள் பற்றிய செய்தி, என்னைப் போன்ற மாணவ மாணவிகள் அவசியம் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டியது.

- டி.எம்.சிவரஞ்சனி, திருவாரூர்

கோகுலத்தின் படக்கதைகளுக்கு என்றுமே தனி மதிப்பு உண்டு. 'குணசீலரின் சீடன்' நான்கு பக்க படக்கதை, வேதாவின் படங்களுடன் வெளிவந்தது அருமை. தொடரட்டும் உங்கள் பணி.

- கே.வே.அனந்தராமன், சென்னை

'மறைந்து வரும் உயிரினங்கள்!' கட்டுரையும் அதில் இடம்பெற்ற படங்களும் அருமை! அழகான அரிய உயிரினங்கள் பல அழிந்து கொண்டு வருவது வேதனையளிக்கிறது.

- பா.விக்னேசுவரன், பா.தர்ஷினி, குட்டம்

'அழகி மானின் செல்ஃபோன்' கதை ஆரம்பத்தில் சுறுசுறுப்பாகவும், இடையில் விறுவிறுப்பாகவும், இறுதியில் கலகலப்பாகவும் இருந்தது!

- ஜி.எம்.மஞ்சரி, கிருஷ்ணகிரி-1

நல்லொழுக்கம் - நன்னெறிகள் - தேசியம் - தெய்வீகம் - உலகாயதம் என்று அனைத்து நல்லுணர்வுகளும் செழிக்க வைக்கும் அனிமேஷன் பற்றிய விவரமான கவர் ஸ்டோரி, பவர் ஸ்டோரி!

- ஆர்.ஆர். உமா, மணலிவிளை

இந்த மாத கோகுலம் அச்சும், அமைப்பும் பளீரென்று இருந்தது. பாராட்டுக்கள்.

- தினேஷ்குமார், ஏழாம் வகுப்பு, அரசு உயர்நிலைப்பள்ளி, சென்னை

நவாசம், ஆனந்தும் கதை, மனத்தில் விவரிக்க முடியாத எண்ணங்களை ஏற்படுத்தியது. பெரிய விஷயத்தை எளிமையாக கையாண்டு ஜெயித்திருக்கிறார். பரிசு பெற வேண்டிய கதை!

- கோ.பச்சமுத்து, திருவண்ணாமலை



தாவரங்களைப் பூச்சிகள் கடிக்கும்; தின்னும் என்றெல்லாம் நாம் படித்திருக்கிறோம். ஆனால், பூச்சிகளை உணவாக்கிக் கொள்ளும் தாவரம்தான் டொசீரா புர்மானி!

தென் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மடகாஸ்கர்... என்று உலகின் பல பகுதிகளிலும் காணப்படும் தாவர வகை இது. 'டொசீரா'

அசைவத் டொசீரா

என்ற குடும்பப் பெயரிட்டு தாவரவியல் குறிப்பிடுகின்ற இந்த தாவரங்களில் பல வகைகள் காணப்படுகின்றன.

அவற்றில் டொசீரா புர்மானி, டொசீரா பெல்டேட்டா, டொசீரா இண்டிகா, குளோரியா ஸ்பெல்லாரிஸ் போன்ற சில வகைத் தாவரங்களை பூச்சிகளை உண்ணும் தாவரங்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்தியாவில் - குறிப்பாக தமிழகத்தில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் பகுதியில் இந்த 'டொசீரா புர்மானி' வகைத் தாவரம் வளர்ந்துள்ளது. நாடுகாணி, தேவாலா, ஓவேலி, சேரம்பாடி உள்ளிட்ட பகுதிகளில், ஈரம் நிறைந்த மண் மற்றும் கற்களின் மேல் படர்ந்துள்ளது இந்தத் தாவரம்!

இலைகளைச் சுற்றிக் காணப்படும்


சிறிய தூவிகளின் முனையில், பசை போன்ற திரவம் காணப்படுகிறது. பார்ப்பதற்கு புல்முனையில் தேங்கிய பனித்துளி போலத் தென்படும் இதில் பட்டவுடன், பூச்சிகள் ஒட்டிக் கொள் கின்றன.

உடனே அவற்றின் உடலில் உள்ள


தாவரம் புர்மானி!

ராம்













நைட்ரஜனை, இந்தச் செடி உறிஞ்சிக் கொள்கிறது. இப்படி, தன்னுடைய தேவைக்கான நைட்ரஜனை பூச்சிகளி டமிருந்து உறிஞ்சிக் கொள்ளும் குழாய் போன்றும், பூச்சிகளை ஈர்க்கும் தூண்டி லாகவும் தூவிகளை பயன்படுத்திக் கொள்கிறது இந்தத் தாவரம்!

காடுகள் அழிந்து வருவதால், அபூர்வமான இந்தத் தாவர இனமும் அழியும் ஆபத்தில் இருக்கிறது என் கிறார்கள் தாவரவியல் ஆய்வாளர்கள், கவலையுடன்!

தென்னாப்பிரிக்கக் காடுகளில் தன் னருகே வரும் விலங்குகளையோ, மனிதர்களையோ உணவாக்கிக் கொள் ளும் மரங்கள் இருப்பதாக கதைகளில் கேட்டிருக்கலாம். ஆனால், பூச்சிகளைத் தின்கின்ற தாவரம் நிஜம்தான் என்று கண்ணெதிரே சாட்சி சொல்கிறது டொசீரா புர்மானி! ●

விடையைச் சொல்; பரிசை வெல் - 19

1. 'லாவணி'யின் முக்கிய இசைக் கருவி ....

2. கின்னஸில் இடம்பெற்ற தங்கமீனின் பெயர்..............................

3. புத்தர் சிலை அமைந்துள்ள ஏரியின் பெயர்..............................

4. கல்வெட்டுகள் பற்றிய படிப்பு..............................

5. கார்களில் நம்பர் பிளேட்டை அறிமுகப்படுத்திய நாடு..............................

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

: ....

பின்கோடு : ....

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 15.1.2009

அனுப்ப வேண்டிய முகவரி:

போட்டி



ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடு தாங்கல், சென்னை - 32

பரிசு ரூபாய் 1000/-

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


826


827


828


829


830


831


832


833


834


835


836


837


838


839


840


841


842


843


844


845


846


847


848


849


850

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka





அசைவத் தாவரம்

டொசீரா பர்மானி!

